www.tamilarangam.net

ஜூன் 1999

# எரிமலை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரு மதிப்பிற்குரிய எரிமலை ஆரியர் குழு தோழர்களுக்கு,

முதற்கண் எமது தோழமை வணக்கங்கள்,

நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம்!

கடந்த ஆண்டு (மே–98) எரிமலை அக்கறைப் பூக்கள் பகுதியில் எங்கள் கடிதத்தை வெளியிட்டிருந்தீர்கள். அந்நாள் தொட்டு ஒவ்வொரு மாதமும் எரிமலை இதழை அனுப்புவீர்கள், அனுப்புவீர்கள் என அஞ்சல்காரரை அன்றாடம் எதிர்நோக்கியுள்ளோம். இதுவரை இதழ் எங்களுக்கு வரவில்லை.

முன்னரே குறிப்பிட்டவாறு உலகத் தமிழர் ஒற்றுமை, தமிழர் நலன், தமிழ் மொழி, தமிழீழ விடுதலை ஆகியவற்றை முன்னிறுத்தி எரிமலை இதழ் அனல் பறக்கும் பல ஆக்கங்களைத் தாங்கி வருவதை அறிந்து பெரிதும் மகிழ்கிறோம்.

இந்த இலட்சியங்களுக்காக தமிழகத்திலும், தமிழீழத்திலும் நடைபெறும் அனைத்துச் செயல்பாடுகளிலும் இணைந்து நிற்கும் இளைஞர் படையினர்தான் நாங்கள். இந்நூற்றாண்டின் தலை சிறந்த மக்கள் விடுதலைப் போர்ப்பணியை நடத்தி வீரதீரமிகு களமாக தமிழீழத்தைச் சிவப்பாக்கி வரும் புலித் தோழர்களின் இன்னுயிர் ஈயும் தியாகங்கள் யாவும் வரலாற்றுப் பெட்டகத்தில் முதன்மையிடம் பெறும் அந்த தியாகிகளுக்கு எமது சிவப்பு வணக்கங்கள்!

தமிழீழப் போர்க்களம், தம்பி பிரபாகரன் அவர்களின் சீரிய தலைமை, போராளிகளின் ஈகங்கள்.... இவை குறித்தெல்லாம் இங்குள்ள பல வணிக இதழ்களும் இருட்டடிப்புச் செய்து வருகின்றன. இவ்வேளையில் உண்மைச் செய்திகளை உலகுக்குத் தர "எரிமலை" ஆற்றும் பணி மகத்தானது.

எரிமலை இதழைப் படிக்கவும் பயன்படுத்தவும் போற்றிப் பாதுகாக்கவும் விரும்புகிறோம். எனவே எரிமலை இதழ் ஒன்றை விரைவாக எங்களுக்கு அனுப்பித் தாருங்கள். தமிழ் உணர்வாளர்கள் பலரும் படிப்போம். இங்குள்ள இன்னும் பலப்பலரையும் தமிழ் உணர்வு




## அக்கறைப்பூக்கள்

பெறச் செய்வோம். அவசியம் அனுப்பித் தரவேண்டுகிறோம்.

எரிமலை இதழுக்கு உதவும் வகையில் இங்கு நடைபெறும் தமிழீழ ஆதரவு நிகழ்ச்சிகள் பற்றியும் தமிழக விடுதலைப் போராட்டச் செய்திகளையும் புகைப்படங்களுடன் உடனுக்குடன் அனுப்பித்தர உறுதியளிக்கிறோம்.

தமிழீழ தாயக மீட்புக்கான தங்கள் பணி சிறக்க

எங்கள் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!

பாலசுப்ரமணியன்
EPB நகர்
ஈரோடு
தமிழ் நாடு

★★★

தமிழழத்திரு. எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம் அய்யா,

நண்பர் ஒருவர் அனுப்பிய எரிமலை புத்தகத்தை படித்தேன் அய்யா. ஜூலை 98 நாற்பது ஆண்டுகளும் தமிழர்களும் என்ற தலைப்பில் வந்த செய்தியை படித்தேன். அய்யா, 1958 ஜூன் சிங்கள தேசத்தை உருவாக்கும் சட்டம் 22.05.1958, 77, 81, 83 கலவரங்கள் போன்ற செய்தியை படித்தேன் அய்யா. மனவேதனையாக இருக்குதய்யா. தமிழ் இனத்தை எப்படியெல்லாம் திட்டமிட்டு நயவஞ்சகமாக ஏமாற்றி அழித்து இருக்கிறார்கள் சிங்கள வெறிபிடித்த நாய்கள்.

400 ஆண்டு காலமாக அடிமை பட்டுக்கிடக்கும் இந்த தமிழ் இனத்தை மீட்க வேண்டும். தமிழனுக்கு ஒரு நாடு இல்லையே. தமிழ் மொழி ஆட்சிமொழியாக வேண்டும். தமிழன் குரல் ஐ.நா.சபையில் ஒலிக்க வேண்டும். தமிழனுக்கு எங்கு இன்னல் நேர்ந்தாலும் அவனுக்கு ஒரு குரல் கொடுக்க சர்வ வல்லமை படைத்த ஒரு தமிழன் நாடு ஒன்று வேண்டும் என்று எண்ணியது யார். அவர்தான் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன்.

தமிழன் என்று சொல்கிறான், தமிழ் இனத்தின் தலைவன் என்றும் கூட சொல்கிறான். ஆனால் தமிழ் இனத்துக்கு என்ன செய்தான் வோட்டைப் பெரிக்கிக்கொண்டு அதிகாரத்துக்கு வருகிறான். ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன் புத்தி பேதலித்துப் போகிறது. தமிழாவது இனமாவது, தான் சம்பாதித்தால் போதும் என்று எண்ணுகிறான். தில்லி ஏகாதிபத்தியத்துக்கு அடிமை நாய்போல் இருக்கிறான்.

தமிழ் இனத்தின் தலைவன் என்று தன்னைத்தானே சொல்லிக் கொள்ளக்கூடாது. தலைவன் என்று தமிழ் இனம் சொல்ல வேண்டும். அந்த வகையில் பார்த்தால் இன்று தமிழ் இனத்தின் தலைவன் என்று உலகமே சொல்லுமளவிற்கு இருப்பவர் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்கள். பிரபாகரன் என்றால் தமிழர்கள், தமிழர்கள் என்றால் பிரபாகரன் என்று பொருள்.

5.1.99 அன்று 26 தமிழர்களுக்கு ஆதரவாக கார்த்திகேயனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தோம் சென்னையில். நான் புதுச்சேரியில் இருந்து சென்றேன்.

அத்துடன் முல்லைத்தீவு தாக்குதல் வீடியோபடம் பார்த்தேன். இப்பொழுது கிளிநொச்சி தாக்குதல் வீடியோ படம் ஒருவரிடம் கேட்டுள்ளோம். நன்றி

வி.பிரபாகரன் தாஸன்
முத்திரையார் பாளையம்
புதுச்சேரி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...



இலக்கற்ற ரணகோசாவும் இலக்குக்கான போரெழுச்சியும்

பக்கம்– 04

கனடாவில்
சர்வதேச மாநாடு

பக்கம்– 12



★ காற்றுப்புகும் இதமெல்லாம் புலிகள் புகுவர் ........ பக்கம் - 08

★ வடக்கு கிழக்கில் இராணுவ சர்வாதிகாரம் ........ பக்கம் - 16

★ இழந்த பிரதேசத்தை மீட்பதே எமது அடுத்தகட்ட நகர்வு ........ பக்கம் - 20

★ உலகப்பந்தில் எங்கள் மாவீரர்கள் ........ பக்கம் - 28

★ சிறுகதை ........ பக்கம் - 40

★ சிறுகதை ........ பக்கம் - 44



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது. இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினெட்டாம் ஆண்டு
ஜூன்
1999

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# புதை குழிகள் இனப்படுகொலையின் அடையாளம்

இரு தமிழ் இளைஞர்களின் மண்டையோடுகளும் எலும்புகளும் செம்மணி புதைகுழிப் பிரதேசத்தில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. 1996-ம் ஆண்டு முதல் இரகசியமாக படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பலநூறு தமிழர்களின் நிலையை ஆதாரபூர்வமாக நிரூபிக்கும் இவ்விரு மண்டையோடுகளும் எலும்புத் துண்டுகளும் இனப்படுகொலையின் மறுக்கமுடியாத சாட்சியங்களாக அமையப்போகின்றன.

கொசோவாவினுள் உள்நுழைந்த மேற்கத்தைய இராணுவத்தினர் சேர்பியர்கள் உருவாக்கிய இரகசிய புதைகுழிகளை, இனப்படுகொலையின் அசைக்கமுடியாத ஆதாரங்களை கண்டுபிடித்தனர் என விபரிக்கப்பட்டனர். றுவண்டாவிலும் பொஸ்னியாவிலும் இவ் இரகசியப்புதைகுழிகள் முழு உலகின் மனச்சாட்சியையும் உலுக்கும் விதமாக அம்பலமாகின. இவ் சர்வதேச ரீதியாக இனங்காட்டப்பட்ட இனப்படுகொலையின் அசைக்கமுடியாத ஆதாரத்தை ஒத்த தடயம் ஒன்றை செம்மணியில் உலகம் கண்டெடுத்துள்ளது. ஆனால் இதனை சில தனி நபர்களின் மனித உரிமை மீறல் நடவடிக்கையென சுருக்கிவிட சிறீலங்கா முற்படுகின்றது. அம்பலமான விடயம் ஒன்றை நாசூக்காக கையாள்வதற்கான வழிமுறையாக புதைகுழிகளைத் தோண்ட நிர்ப்பந்திக்கப்பட்ட சந்திரிகா அரசு தமது இச் செயற்பாட்டை தனது மனித உரிமைகள் மீதான கரிசனை என வெளிக்காட்ட முற்படுகின்றது.

தமது ஜனநாயகத் தோற்றத்தில் சட்டம் ஆட்சிசெய்யும் நாடு என்ற வெளிப்பகட்டு தோற்றாய் ஏற்படுத்தக்கூடிய செம்மணிப் புதைகுழி விவகாரத்தை நுட்பமாக கையாள முற்பட்டுள்ள சந்திரிகா அரசு அடுத்தடுத்து எழும் விடயங்களால் முகமூடி இழக்கப்போவது திண்ணம்.

மட்டக்களப்பிலும், திருமலையிலும் பல நூறு தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இத்தகைய இனங்காட்டப்படாத பல புதைகுழிகளில் மூச்சுத்திணற புதைக்கப்பட்டுள்ளனர். யாழ் குடாவிலும் வவுனியாவிலும் பல நூறு தமிழர்கள் புதைகுழிகளினுள் மௌனமாக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் பொல்கொடவாவியில் மௌனமாக்கப்பட்ட பல தமிழர்களின் உடல்கள் மிதந்தன.

இவை அனைத்தும் தனித்தனிக் குற்றச்சாட்டுக்கள் எனவும் தனது இராணுவமோ அரசோ இப்படுகொலைகளில் சூத்திரதாரிகள் அல்ல எனவும் சந்திரிகாவும் அவரது வெளிவிவகார நிபுணர்களும் நுட்பமாக கருத்துக்கூற முற்படின் அது உலக சமூகத்தின் பொது விவேகத்தை குறைத்து மதிப்பிடும் பேரினவாத திமிர்த்தனம் என்றுதான் கூறமுடியும்.

திட்டமிட்ட ஒரு இனப்படுகொலை நோக்கில் சிங்கள பேரினவாத அரசும் இராணுவமுமே புதைகுழிகளின் சூத்திரதாரிகள். இதனை வரலாறு நிரூபிக்கும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கற்ற ரணகோசாவும் இலக்குக்கான போரெழுச்சியும்

## மாற்றத்தினுள் அரசியல் - இராணுவ சமநிலை

சிறீலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்ற லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரியாவின் முதலாவது பாரிய போர் நடவடிக்கை வன்னியின் மேற்குப் பிராந்தியத்தை ஊடறுத்துச் செல்லும் "ரணகோசா" (போர்க் கோசம்) ஆகும். புலிகளுக்கும் – சிறீலங்கா அரசுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகப் போகின்றன என்ற செய்தியும், மாகாண சபைத் தேர்தல்களில் சந்திரிகா அரசு கடும் போட்டிகளை சந்திக்கின்றது என்ற ஊகிப்பும் நிலவிய கால கட்டத்தில் ரணகோசா இராணுவ நடவடிக்கையை லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரியா நடத்தினார்.

முன்னைய "ஜெயசிக்குறுய்" நடவடிக்கை போன்று "ரணகோசா" வும் எவ்வித இலக்குகளையும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. முதல் கட்டமாக இராணுவம் இதனை இலுப்பங்குளம் வன்னி விளாங்குளம் போன்ற பகுதிகளூடாக நகர்ந்த போதும் இரண்டாம் கட்டமாக மடு தேவாலயப் பகுதி வரை நகர்ந்த போதும் புலிகள் எது வித எதிப்புகளையும் வெளிக்காட்டாது ரணகோசா "வெற்றிக்கொடி" நாட்ட அனுமதித்தனர். மூன்றாம் கட்டமாக நகர முற்பட்டபோதே புலிகளின் இராணுவம் சமரை நடாத்தி நகர்வை முடக்கியது. தற்போது 4—ம் கட்டமாக விடத்தல்தீவு வரை சிங்கள இராணுவம் முன்னேறியதாக அறிவிக்கப்படுகின்றது.



இவ் "ரணகோசா" போர் நடவடிக்கையின் நோக்கங்கள் என்ன?

**அ.** வன்னியின் மேற்குப் பகுதியூடாக நகர்ந்து யாழ்குடாநாட்டிற்கு ஒரு பாதை அமைப்பது.

**ஆ.** வன்னியைச் சுற்றி வளைத்து பல போர் முனைகளை உருவாக்கி அதன் மூலம் புலிகளை மரபு வழிச் சமரில் பலவீனப்படுத்தி அழிப்பது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ. "ஜெயசிக்குறுய்" மூலம் தாம் இழந்த இராணுவ ஆளுமையை மீளப் பெறுவது.

ஈ. சிங்களப் பகுதிகளில் தேர்தல்கள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளமையால் போரை பரப்புரைக் கருவியாகப் பயன்படுத்துவது.

உ. தொடர்ச்சியாக சமரினுள் வைத்திருப்பதன் மூலம் புலிகளின் பரிணாம வளர்ச்சி மீது அழுத்தத்தை பிரயோகிப்பது.

என பல காரணங்களை "ரணகோசா" வுக்கு ஆய்வாளர்கள் வழங்கியுள்ளனர்.

ரணகோசா மூலம் மடுவரை சிறீலங்கா இராணுவம் உட்புகுந்து ஆக்கிரமித்தமை மன்னார் – வவுனியா வீதியின் தென்புறத்தில் வில்பத்து சரணாலயப் பகுதிவரை நிலவிய புலிகளின் இராணுவ ஆளுமையை இல்லாதொழிக்கும் நிலை எனவும் புலிகளிடம் அளவிடமுடியாத இராணுவ – நிதிப்பலம் என்பன இருந்தால் மாத்திரமே வன்னியில் தாம் இழந்த சுமார் ஆயிரம் சதுர கிலோமீற்றர் பிரதேசத்தின் தாக்கத்திலிருந்து அவர்களால் மீளமுடியும் என கொழும்பின் Mid week Mirror ஆய்வாளர் கருத்துவெளியிட்டார்.

ரணகோசா 2 –ன் மூலம் மடுவைக் கைப்பற்றியது சிங்கள கத்தோலிக்கர்களிடையே சந்திரிகாவின் புகழை வளர்க்க உதவும். ஆனால் கிளிநொச்சித் தாக்குதல் போன்று பாரியதொரு தாக்குதலை புலிகள் நடத்தாது இருந்தாலே இது சாத்தியமாகும் என இதே ஏட்டின் அரசியல் விமர்சகர் ரணகோசாவின் அரசியல் பயன்பாடு பற்றி கூறினார்.

சிறீலங்காவின் வன்னி தளபதி மேஜர். ஜெனரல் பலகெல ரணகோசா நடவடிக்கையின் வெற்றியானது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் பின்னர் பெறப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனை என வர்ணித்தமையை சுட்டிக்காட்டிய சண்டே ரைம்ஸ் ஏட்டின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் புலிகள் ரணகோசவை பிழையாகக் கணிப்பிட்டுவிட்டதாக எழுதினார். சிறப்புப் படைகள், 53–ம் படைப்பிரிவு (விமான நகர்வு பிரிவு உட்பட), 55–ம் படைப்பிரிவு என்பன புலிகளை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கி ரணகோசாவை நடாத்தியதாக அத்தாஸ் நம்புகின்றார். எனினும் தமது அரசியல் தேவைகளுக்காக புலிகள் ரணகோசாவை கையாள்வார்கள் என்றும் ஐயம் தெரிவித்தார்.

ரணகோசாவை அதன் இராணுவ பயன்பாட்டு கோணத்தில் ஆராய்ந்த முன்னாள் இந்திய அமைதிப்படைத் தளபதி ஜெனரல்.ஏ.எஸ் கல்கத் சிங்கள இராணுவத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கையென விமர்சித்தார். அவரது கருத்துக்கள் ரணகோசாவின் அரசியல் பயன்பாட்டை மறைமுகமாக குறித்துக் காட்டின. பிரயோசனமற்ற மேற்குக் கரையோரமாக பாதை திறப்பது வன்னியில் முக்கியமான கிழக்குக் கரையை ஆட்பல, சுடுகல எண்ணிக்கையைப் பலவீனப்படுத்துவது என கல்கத் கருதுகின்றார்.



ஆனால் ரணகோசா மூலம் வன்னியை சுற்றிவர ஒரு எதிரி இராணுவ வலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளமையும், இதன் மூலம் புலிகள் பல்வேறு முனைகளில் ஒரு போரை நடாத்த அழைக்கப்பட்டுள்ளமையும் பொதுவாக அவதானிக்கப்படுகின்றது.

**சந்திரிகாவினதும் சிங்கள பேரினவாதிகளினதும் அரசியல் இராணுவ நோக்குகளை புலிகள் எப்போதும் அனுமதிக்கப்போவதில்லை**

இவ் இராணுவ அணுகுமுறையானது சந்திரிகா அரசின் போர் தொடர்பான தெளிவான முடிவை அறியத் தருகின்றது. மாகாணசபைத் தேர்தல் – பாராளுமன்றத் தேர்தல் – ஜனாதிபதித் தேர்தல் என்பன அண்மிக்கின்றன. சமாதானம் என்ற கோசத்துடன் பதவியேற்ற சந்திரிகா போர்க் கோசத்துடன் அடுத்த தேர்தலை வென்றெடுக்க முனைப்பாகவுள்ளமை தெளிவானது. ஆனால் சிங்களத்தின் முழுமையான இராணுவ நோக்கானது அதன் இலக்கை அடைவதற்குரிய பூரண இராணுவ பலத்தைப் பெற்றிருக்கவில்லை.

ரணகோசாவின் இலக்கு குறிக்காத நோக்கும் அதற்கு இராணுவத் தளபதிகள் முரண்பாடுகளுடன் கொடுக்கும் புகழாரமும் வன்னியின் இராணுவ நிலமைகளை தீர்மானிக்கும் பிடியை தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் தன் கையில் வைத்துள்ளமையை தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

சந்திரிகா அரசு இவ் இராணுவ யதார்த்தத்தை கையாள்வதற்காகவே அமைதிவழி பேச்சுக்கள் என்ற காயை அங்கொன்றும் இங்கொன்றுமாக நகர்த்துகின்றார்.

சூரியக் கதிர் நடவடிக்கை சந்திரிகாவிற்கு சிங்கள சமூகத்திலும் உலக அரங்கிலும் புதிய பரிணாமத்தைக் கொடுத்தது. பிரபாகரனுக்கு சரிக்கு சரி பதிலடி கொடுக்கக்கூடிய சிங்களத் தலைமை என சந்திரிகாவை இந்திய ஆங்கில சஞ்சிகை ஒன்று வர்ணித்தது. புலிகளை அழிப்பதும் – ஒதுக்குவதும் வெகு வேகமாக இடம்பெறுவதாக மேற்குலகு கருதியது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைமுகமாக இவ் ஊகங்கள் சந்திரிகா அரசைப் பலப்படுத்தியது. சத்ஜெய, எடிபல என்பன புலிகளை பலவீனப்படுத்தியதாக நம்பப்பட்டது. ஆனால் ஜெயசிக்குறுய் இவ் எண்ணத்தை தலைகீழாக்கியது.

எண்ணிக்கையற்ற கால எல்லைகள், வீரப்பிரதாப அறிக்கைகள், குத்துக்கரணங்கள் என்பன சிங்கள – உலக சமூகத்தினரிடையே சந்திரிகாவின் – இராணுவ – அரசியல் தலைமை மாயையை உடைத்தது. ரணகோசா இவ் தலைகீழாகிய இராணுவ அரசியல் கணிப்பீட்டை மீள புனருத்தாரணம் செய்ய பயன்படுத்தப்பட்டது என்பதும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது.

சந்திரிகாவினதும் சிங்கள பேரினவாதிகளினதும் அரசியல் இராணுவ

**நிதிப்பலமானது இன்றைய போரின் அத்தியாவசிய தேவையாகிய நிலையில் புகலிடத் தமிழர்களே இப் பலத்தை வழங்கும் சக்திகள் ஆவர். இக்கடமையை புகலிடத்தமிழர்களை வழங்கமுடியுமாயின் போர்முனையின் சமநிலையில் சாதகமான மாற்றங்களை புகலிடத் தமிழர்கள் ஏற்படுத்தலாம்.**

நோக்குகளை புலிகள் எப்போதும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே புலிகளை போர் மூலம் தோற்கடிப்பதே தம்முன் உள்ள ஒரே பாதை என்பதை சிங்களம் கணித்துவைத்துள்ளது. ஆனால் ஐ.தே.க – சு.க என பிளந்துபோய்க் கிடக்கின்ற சிங்கள அரசியல் தலைமைச் சக்திகளிடையே தேர்தல் போட்டிகளை வெல்வதற்கான ஒரே விளைநிலம் "சிறுபான்மை சமூகம்" ஆகும்.

"சிறுபான்மை சமூகங்கள்" என வர்ணிக்கப்படுபவை சிங்களவர்கள் மத்தியில் பரவி அச்சத்துடன் வாழும் தமிழ் –முஸ்லீம் மக்களாவர். தீவின் மத்திய பகுதி தமிழர்களையும் சிறுபான்மைத் தமிழர்களாகவே சிங்களம் கருதுகின்றது.

தீவின் வடக்கு – கிழக்குத் தமிழர்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் தமக்கான அடையாளத்தை கொண்டவர்கள். கடந்த 20 வருட காலமாகத் தேர்தல்கள் மூலம் தமது அரசியல் தலை விதியை நிர்ணயிக்கும் உரிமையை இழந்து சிங்கள இராணுவத்தின் "துணைப்படைகள்" மூலம் கையாளப்படுபவர்கள்.

சிறுபான்மைத் தமிழர்களை வெல்வதற்கு இரு பிரதான கட்சிகளும் இரு வேறுபட்ட அணுகுமுறையைக் கையாள்கின்றன.

அ) ஆளும் சந்திரிகாவின் கட்சி மதகுருமாரை வன்னிக்கு அனுப்பி சமாதானப் பேச்சுக்கள் பற்றிய தோற்றத்தை மீள ஏற்படுத்த முனைந்தது. அரசின் ஏடான தினகரன், டெய்லி நியூஸ் (Daily News) மதகுருமார் பயணத்தை தலைப்புச் செய்தியாக்கியது. முதலாவது விஜயம்முடிந்து இரண்டாவது ஆரம்பமாவதற்கிடையில் சந்திரிகா தேர்தல்கள் மூலம் கருத்துக் கணிப்பீடொன்றை மேற்கொண்டார். மேற்கு மாகாணசபைத் தேர்தல்களில் தமிழர்கள் தன்னை முழுவதுமாக புறக்கணித்துவிட்டதைக் கணித்து மதகுருமாரை அவசர அவசரமாகச் சந்தித்து பேச்சு வார்த்தை பற்றி தலைப்புச் செய்திகளை வழங்கினர். ஆனால் இரண்டாவது தடவையாக வன்னிக்கு மதகுருமார் செல்ல முனைந்த போது வன்னி கதவை இறுகச் சாத்திவிட்டது.

ஆ) ஐ.தே.க வணிகர்களின் இணக்க முயற்சிக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறியது. அதனை சிறுபான்மையினரை வெல்வதற்கான ஆயுதமாக ஐ.தே.க பயன்படுத்துகின்றது. முன்பு சந்திரிகா தமிழர் வாக்குகளைப் பெற பாவனை செய்த "மொழிகளை" ரணில் விக்ரமசிங்கவும் அவரது கட்சி உறுப்பினர் டாக்டர் ஜெயலத்தும் பயன்படுத்துகின்றனர்.

இவ் முரண்பட்ட கட்சிகளிடையே புலிகள் சிங்களத்தின் நோக்கத்தை தெளிவாக வரையறை செய்தனர்.

**அ)** தமது இராணுவ பலத்தை அதிகரிக்க சிங்களம் செய்யும் தீவிர முயற்சிகள்.

**ஆ)** புலிகளின் ஆயுத விநியோகப் பாதையை முடக்க சிங்களம் செய்யும் பரப்புரை – ராஜதந்திர முயற்சிகள்.

**இ)** புலிகளின் சர்வதேச பலத்தை

> புலிகளின் அதிகரிக்கப்படும் படைக் கல ஆற்றல் போரை முடிவுக்குத் தள்ளுகின்றது. புலிகளினால் வன்னி – யாழ் குடா – திருமலை – மட்டக் களப்பு பிராந்தியங்களை விடுவிக்க முடியுமாயின் அரசியல் – ராஜதந்திர பலம் தமிழர்களுக்கு கிட்டும்



குறிவைத்து தமிழர்கள் பரவி வாழும் இடங்கள் தோறும் சிங்களம் நடத்தும் நிதி சேகரிப்புக்கு எதிரான வாதங்கள்

என்பன போரை நீடித்து அழிக்கும் சந்திரிகாவின் கபட நோக்கத்தை தமிழர்களுக்கு புலப்படுத்தியது. போரின் கால எல்லையை சற்று நீடித்து பொருளாதார அழுத்தங்களைப் பிரயோகித்து மனச் சோர்வை உருவாக்கவும் எதிரி முனைந்தான்.

இவற்றிற்கு தமிழர்கள் கொடுத்துள்ள பதிலடிதான் போர் எழுச்சி நிகழ்வுகளாகும்.

**அ)** ஆட்பல அதிகரிப்பு.

**ஆ)** சுடுகல ஆற்றல் அதிகரிப்பு.

**இ)** அரசியல் நிலையைப் பலப்படுத்தல்.

**ஈ)** ராஜதந்திர நிலையைப் பலப்படுத்தல்

என்பனவற்றை நோக்காகக் கொண்டு தமிழர்கள் மாபெரும் போர் எழுச்சி நிகழ்வை ஏற்பாடு செய்கின்றனர்.

இன்றைய போர்க்கள நிலவரம் மக்களை எழுச்சிகொள்ள வைக்கின்றது. அதிகரித்துவரும் புலிகளின் போர் ஆற்றல் மக்களை நம்பிக்கை கொள்ளவைக்கின்றது. இவ் மக்கள் எழுச்சி தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை பலப்படுத்தி இதன் மூலம் அனைத்துலக ரீதியாக போதுமான இடம் எடுத்து செயற்பட புலிகளுக்கு ராஜதந்திர பலத்தைக் கொடுக்கிறது.

முன்னர் புலிகளை அழித்து போரை முடிவுக்கு கொண்டு வரலாம் என நம்பிய சில மேற்குலக நாடுகள் புலிகளையும் – சிறீலங்கா அரசையும் இருந்து பேசுமாறு வற்புறுத்துகின்றன. முன்பு யாழ் குடாநாட்டை சிங்கள அரசு காட்சிப் பொருளாகப் பாவித்து நிதி திரட்டிய போது வாரி வழங்கிய ஐரோப்பிய சமூக நாடுகள் தற்போது சிறீலங்காவை விமர்சிக்கின்றன. சிங்களத்தின் "தீர்வுப் பொதி" அர்த்தமற்ற தந்திரோபாயம் என்பதை சகல தரப்பினரும் அறிவர்.

இவ் நிலவர பின்புலத்தில் புலிகளுக்கும் – சிங்கள அரசுக்கும் இடையேயான சமநிலை அல்லது தமிழர்களுக்கும் – சிங்களவர்களுக்கும் இடையேயான சமநிலையில் மாற்றம் காண ஆரம்பித்துள்ளது.

புலிகளின் அதிகரிக்கப்படும் படைக்கல ஆற்றல் போரை முடிவுக்குத் தள்ளுகின்றது. புலிகளினால் வன்னி – யாழ் குடா – திருமலை – மட்டக்களப்பு பிராந்தியங்களை விடுவிக்க முடியுமாயின் அரசியல் – ராஜதந்திர பலம் தமிழர்களுக்கு கிட்டும்.

பிராந்தியங்களை விடுவிப்பது என்பது புலிகளின் தற்போதைய தற்காப்பு போர் வியூகங்கள் வலிந்து தாக்குதல் நிலைகளுக்கு நகர்ந்து விரிவாக்கம் பெறவேண்டும்.

அவ் மாற்றத்திற்கு ஆட்பல அதிகரிப்புடன் பாரிய நிதிப்பலம் தேவைப்படும்.

நிதிப்பலமானது இன்றைய போரின் அத்தியாவசிய தேவையாகிய நிலையில் புகலிடத் தமிழர்களே இப் பலத்தை வழங்கும் சக்திகள் ஆவர். இக் கடமையை புகலிடத் தமிழர்களை வழங்கமுடியுமாயின் போர் முனையின் சமநிலையில் சாதகமான மாற்றங்களை புகலிடத் தமிழர்கள் ஏற்படுத்தலாம்.

**நாதன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காற்றுப் புகும் இடமெல்லாம் புலிகள் புகுவர் ...!!



## சொல்லிப்பின் செயலில் அல்லர் – புலிகள் செயலின் பின் சொல்வதில் வல்லர்

புதுக்குறளை இப்படியும் கொள்ளலாம். சிங்கள இராணுவத்தின் ஓர் அங்கமான, ஈ.பி.ஆர்.எல்.எப் ராசீக் குழுவின் தலைவர், ராசிக் எனப்படும் முத்துலிங்கம் கணேசகுமார் மட்டக்களப்பு நகரில் வைத்து, அழிக்கப்பட்ட சம்பவம், விடுதலைப் புலிகளின் புலனாய்வு வேலைத் திட்டம் குறித்தும், தாக்குதல் திறன்குறித்தும் மேலும் ஒரு சான்றாதாரமாக மிளிர்கின்றது.

சிங்கள இராணுவத்தின் ஒரு அங்கமாகவே மாறி, தமிழ் மக்களுக்கு எதிரான மிகக்கொடுமையான நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியதில் ராசிக் முக்கியமானவர்.

ராஜீவின் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலகட்டத்திலும், அதற்குப் பின்னரான காலப்பகுதியில், சிங்கள இராணுவத்துடனும் இணைந்தும் தனது இனவிரோதச் செயற்பாட்டை, ஒரு தவமாகவே இயற்றி வந்தவர்.



மட்டக்களப்பு மண், இந்தத்துரோகத் தலைமையின் கீழ் அணி வகுத்து நின்ற, நூறுக்கும் மேற்பட்ட இனவிரோதிகளின் கையில் சிக்கி, எத்துணை துன்பத்தையும் வேதனையையும் தாங்கியிருக்கும் என்பதற்கு, அந்த தேசத்துரோகி அழிக்கப்பட்ட போது ஆனந்தப்பட்டதில் இருந்து புரிந்துகொள்ளலாம்.

முக்கியமான, இராணுவப் படை நடத்துகையை மேற்கொள்ளும் தளபதியைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல் போல, விடுதலைப் புலிகளும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, கரும்புலித் தாக்குதலின் மூலம் இத்தேசத்துரோகியை தாக்கியழித்ததில் இருந்து, ராசீக், எம்மண்ணின் விடுதலைக்கு செய்த... செய்து வந்த துரோகங்களும் காட்டிக் கொடுப்புகளும் அழிவுகளும் எண்ணிலடங்காதவை என்பது நன்கு புலப்படும்.

என்னதான் மட்டக்களப்பு நகர் பாதுகாப்பாக இருந்த போதும், சிங்களப்படையின் இறுக்கமான பாதுகாப்பு அரணுக்குள் இருந்து கொண்டு, இனவிடுதலைக்கு எதிரான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயல்பட்டபோதும், விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து ராசீக்கால் தப்பமுடியவில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இரண்டு மணிநேர இடைவெளிக்குள் யாவும் நடந்து முடிந்திருக்கின்றது. கடந்த மாதம் 29–ம் திகதி, கராஜ் ஒன்றிற்கு சென்று அலுவல் நிமித்தம் காத்திருந்து திரும்புவதற்கு இடையில், விடுதலைப்புலிகளுக்கு தகவல் பறந்து சென்றது, சொற்ப நேரத்திலேயே, கரும்புலி வீரன் தன் இரையை நோக்கி, மிகவும் உறுதியுடனும் நிதானத்துடனும், எடுத்தகாரியம் முடிக்கப்போகிறேன் என்ற உளக்களிப்புடனும் சைக்கிளில் புறப்பட்டு வந்தார்.

நினைத்தபடி யாவும் இலகுவாக எட்டிவிட்டது.

இனவிரோதி ராசீக்கின் கதை முடிந்தது.

அதுபோல எங்கள் கரும்புலிவீரனும் தனது பணியை முடித்து நெஞ்சு கனக்கவைக்கும் தன் அற்புதமான தியாகத்தை உயிர்காவியமாக எம் மத்தியில் உலவவிட்டு சென்றுவிட்டார்.

அண்மையில் பி.பி.சி தமிழோசைக்கு செவ்வி வழங்கிய ராசீக், புலிகளை ஒழித்துக்கட்டுவதே தனது வேலை என்று சூளுரைத்திருந்தார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் பெரமுன என்ற சிங்களப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், இந்திய அமைதிப்படை காலத்தில் 237 புலிகளை, தானே சுட்டிருப்பதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார். 1983–ம் ஆண்டிலிருந்து இந்த விளையாட்டைத்தான் செய்து வருகின்றோம் என்றார்.

> **இங்குதான், விடுதலைப்புலிகள், துரோகிகளுக்கு எச்சரிக்கை விடுத்து வெளியிட்ட அறிக்கையில், கோடிட்டுக் காட்டப்பட்ட வார்த்தையின் இறுக்கம் நன்கு புரிகின்றது.**
> **"காற்றுப் புகும் இடமெங்கும் விடுதலைப்புலிகள் வருவர்" என்பது, சிங்களத்தின் சுவாசக் காற்றையும் நடுங்கவைக்கும் சொல்லாயுதமாகின்றது.**

ஆனால் இது விளையாட்டல்ல, தீவினைப் பயனறுக்கும் வினை விதைப்பென்பதை அறிந்துகொள்ள அவர் உயிருடன் இல்லை. என்றாலும் அவரைப் போன்றும், அவரைப் போன்றவர்களுக்கு பின்னால் ஏதோ ஒரு குருட்டு வழிகாட்டலில், தமது சவக்கிடங்கு நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருப்பவர்களுக்கு, இதுவிளையாட்டல்ல என்பது புரிவதாக.

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பு கேள்விக்கிடமானது என்பதை சிங்களம் மீண்டும் புரிந்துகொண்டது. சிங்கள இராணுவத்தால், சுற்றி அரண் அமைக்கப்பட்ட மட்டக்களப்பு நகர் மட்டுமல்ல, சிங்களத்தின் இலக்குகள் எங்கு உள்ளனவோ அவ்வப்பகுதிகளும் பாதுகாப்புக் குறித்த கேள்விகளையே சுமந்து நிற்கின்றன.

இங்குதான், விடுதலைப் புலிகள், துரோகிகளுக்கு எச்சரிக்கை விடுத்து வெளியிட்ட அறிக்கையில், கோடிட்டுக் காட்டப்பட்ட வார்த்தையின் இறுக்கம் நன்கு புரிகின்றது. "காற்றுப் புகும் இடமெங்கும் விடுதலைப்புலிகள் வருவர்" என்பது, சிங்களத்தின் சுவாசக் காற்றையும் நடுங்கவைக்கும் சொல்லாயுதமாகின்றது.

இன விரோதி, ராசீக் கொல்லப்பட்டு, ஒரு வாரத்தில் விடுதலைப் புலிகள், நீண்டதும், கண்டிப்பானதும், இறுதியானதுமான எச்சரிக்கை விடுத்து, கூலிக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்காகவே அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

**– சுப்பு –**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்குத் திரும்புவதாக இருந்தால் திரும்புங்கள். அல்லது போராட்ட வாழ்க்கையில் எம்மோடு தோளோடு தோள் சேர்ந்து எதிரிக்கெதிராக போராட வருவதாய் இருந்தாலும் வாருங்கள் முழு மனதோடு வரவேற்கின்றோம்.

ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை விடுத்து, எதிரியின் பாதுகாப்புக் கோட்டைக்குள் இருப்பதாக நினைத்துக் கொண்டு, இனவிரோதச் செயல்களில் ஈடுபடுவீர்களானால், உங்களின் அழிவை யாராலும் தடுக்க முடியாது என்பது அறிக்கையில் தெரி

எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும். அதனைக் கண்டுபிடித்து, அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான் எங்களுடைய வெற்றியே தங்கியிருக்கிறது.



தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**சிங்களம் தனது பங்கிற்கு, தனது கூலிக்காக பதவி உயர்வையும், தனது தேசியக் கொடி போர்த்தி புகழாரத்தையும் சூட்ட, கொழும்புக் குழுக்களும் அவசரமாக மட்டக்களப்பு சென்று, அஞ்சலி செலுத்தி தமது நிலையையும் தெளிவுபடுத்தின.**

விக்கப்பட்டிருக்கின்றது. முல்லைத்தீவும் கிளிநொச்சியும் புலிகளின் ஓயாத அலைகளில், இருந்த இடம் தெரியாமல் அள்ளுண்டு போய்க்கிடக்கையில், சிங்களத்தின் பாதுகாப்பு அரண் என்பது உங்களைப் பாதுகாக்காது என்பது விடுதலைப்புலிகளின் கூற்று.

ராசீக் உடல் சிறீலங்கா தேசியக் கொடியால் போர்த்தப்பட்டிருக்க, அவரது, விசுவாசமான இனவிரோதப் பணிக்காக, பதவியுயர்வையும் சிங்களப்படைத் தலைமை அறிவித்தது.

ஒரு சிங்கள இராணுவ அதிகாரி கொல்லப்பட்டதற்கு சமனான நிகழ்வு. சிங்களம் மிகவும் கவலைகொண்டு, துயர்கரைத்தது. பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் தூண்களான கொழும்பு இனவிரோதப் பத்திரிகைகளும் ராசீக்கின் சேவையைப் பாராட்டவும், இழப்பிற்கு கவலை கொள்ளவும் செய்தன.



சிங்களம் தனது பங்கிற்கு, தனது கூலிக்காக பதவி உயர்வையும், தனது தேசியக் கொடி போர்த்தி புகழாரத்தையும் சூட்ட, கொழும்புக் குழுக்களும் அவசரமாக மட்டக்களப்பு சென்று, அஞ்சலி செலுத்தி தமது நிலையையும் தெளிவுபடுத்தின. அஞ்சலிக்கூட்டத்தில் அவரின் சேவை குறித்து பாராட்டவும் செய்தன. தமிழின விடுதலையை அழிக்க வந்து அழியுண்ட ஒரு சிங்கள இராணுவ அதிகாரிக்கு, அஞ்சலி செலுத்தியது போல் இந்நிகழ்வு இருந்தது.

உங்களது துரோகச் செயல்களைக் கைவிட்டு, மானத்துடன் தமிழர்களாக வாழப் போகின்றீர்களா? அல்லது, மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு, அநியாயமாக உங்களை நீங்களே அழித்துக்கொள்ளப்போகின்றீர்களா? என்று விடுதலைப் புலிகள் எழுப்பியுள்ள கேள்விக்கு, நிட்சயம் அவர்கள் பதிலளித்தே ஆக வேண்டும்.

▼



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கிருஷாந்தி கொலைவழக்கில் மரணதண்டனை பெற்ற கைதி கோப்ரல் ராஜபக்சவின் சாட்சியம்



(யாழ் நீதவான் முன்னிலையில் புதைகுழிகளை அடையாளம் காட்ட முன்னர் அறிவிக்கப்பட்ட சாட்சியம்)

★ மக்கள் புதைக்கப்பட்ட 10 இடங்களை என்னால் காட்டமுடியும்.

★ நான் வெறுமனவே உடல்களைப் புதைத்தேன். எனக்கு பாதிக்கப்பட்டவர்களின் அடையாளம் (யார் என்பது) தெரியாது.

★ நான்கு உயர் அதிகாரிகளே இக் கொலைக்கு காரணம்.

★ நான் உண்மையை வெளியே சொல்ல முற்பட்டதன் காரணம், நான் ஈடுபடாத கொலை ஒன்றிற்காக நான் தண்டிக்கப்பட்டேன். கொலைகாரர்கள் வீட்டில் உள்ளனர். நான் சிறையில் உள்ளேன்.

★ செம்மணியைத் தவிர உடல்கள் புதைக்கப்பட்ட வேறு இடங்களையும் என்னால் காட்ட முடியும். அரியாலை கிழக்கிலும் பூம்புகாரிலும் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.

★ இளநிலை அதிகாரிகளின் கடமை, உயர் அதிகாரிகள் தரும் கட்டளைகளை நிறைவேற்றுவது. நான் உடல்களை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டேன். இவை கிருஷாந்தியுடையதா அல்லது எவரினதோ என்பது பற்றி புதைக்கும் போது நான் அறியேன்.

★ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கணவனும் மனைவியும் வீட்டிலிருந்து திரைப்படம் பார்த்துக் கொண்டருந்தபோது கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் கொல்லப்பட்டனர்.

★ நான் இந்நாட்டின் இராணுவத்தினர் அனைவரையும் குற்றசாட்டவில்லை. இச் செயல்களில் ஈடுபட்டவர்களை மட்டுமே குற்றம் சாட்டுகின்றேன்.

★ நான் 10 புதைகுழிகளையும், என் சக குற்றம் சாட்டப்பட்டவர் 5 புதைகுழிகளையும் அடையாளம் காட்டுவார். ஆனால் 3 வருடங்களின் முன் இச் சம்பவங்கள் இடம்பெற்றமையால் அவ் இடங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு நான் பொறுப்பாளியல்ல.

## இன்னுமொரு ராஜபக்ச

இதை எழுதுவதனால் கூட
என் கவிதை குரூரமாகத் தண்டிக்கப்படலாம் அன்றேல்,
புதைக்கப்படலாம், என்னுறவுகளைப் போல்
அம்பலப்படுத்துவதனால்,
தாக்குதலுக்கு உட்படலாம்,
நானும் அந்த ராஜபக்சவைப் போல்
சப்பித் துப்பிய சக்கைகளாக,
அந்த உப்பு வெளியில்
உக்க வைக்கப்பட்டவர்களுக்காய்,
தந்த ஒப்புதல் வாக்கு மூலம்
பழிக்குப் பரிகாரமல்ல... பலி கொடுப்பிற்கான ஆதாரம் அதுவே.

தேடுவோம் எல்லோரும் எல்லோருக்குமாய்,
நாம் தொலைத்துவிட்ட நிம்மதியையும் கூடத்தான்.
இனித்தேடுவோம்,
இறந்தவர்களையல்ல,
இறக்கச் செய்யப்பட்டவர்களின் இறுதி எச்சங்கள் இருந்தால்.

ஆராச்சிக்காக இல்லாவிடினும்
எங்கள் ஆறுதலுக்கேனும் இன்னும் தேடுவோம்.

செம்மணியின் நிலக் கீழ் அறைகழில்
சாட்சிக்கு வைக்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகள்
எவர் எவருடையது என்று இனியும் தேடுவோம்.

காணாமல் போனர்வர்களில்
எவர் எவர் எங்குள்ளார்கள் என்று பின்னரும்
தேடுவோம்.
எங்கெல்லாம் புதைக்கப்பட்டுள்ளன
எம் உறவுகள் என்று.

இதை எழுதியதனால் கூட
என் கவிதை தண்டிக்கப்படலாம்....
அன்றேல் புதைக்கப்படலாம்

**வேலணையூர் சுரேஸ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒட்டாவாவில் சர்வதேச மாநாடு

## தமிழ் மக்கள் தேசியப் பிரச்சினை குறித்து ஒட்டாவாவில் சர்வதேச மாநாடு பன்நாட்டு பேராளர்கள் கலந்து கொண்டனர் கனடிய பாராளுமன்றத்தில் வரவேற்புபசாரம்

கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் "தமிழர் தேசியமும், இலங்கைத் தீவில் சமாதானத்திற்கான தேடலும்" என்னும் தலைப்பில் கடந்த மே மாதம் 21, 22–ம் நாட்களில் சர்வதேச மாநாடு ஒன்று சிறப்புற நடைபெற்றுள்ளது. கால்ரன், ஒட்டாவா பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களை உள்ளடக்கிய தமிழ் மாணவர் கல்விக் களஞ்சியத்தால், கால்ரன், ஒட்டாவா பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட இவ் மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, ஜேர்மனி, சிறீலங்கா, அவுஸ்திரேலியா, சுவீடன் ஆகிய நாட்டு பேராளர்களுடன் கனடியப் பேராளர்களும் கலந்துகொண்டனர்.

மாநாட்டிற்கென வருகை தந்த பேராளர்கள் மாநாட்டிற்கு முன் தினம் மே 20–ம் நாள் வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் கனடிய பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட உத்தியோக பூர்வ வரவேற்புபசாரத்தில் கலந்துகொண்டனர். பல மத்திய மாநில பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டு பேராளர்களை வரவேற்றனர்.



பலருடனும் ஆர்வத்துடன் அவர்கள் உரையாடி, தமிழர் தேசிய இனப்பிரச்சினை குறித்த அவர்கள் கருத்துக்களை கேட்டறிந்த வண்ணம் இருந்ததை எங்கும் காணக்கூடியதாக இருந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட 20 பேராளர்களில் 17 பேர் இவ் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர்.

மே 21–ம் நாள் வெள்ளிக்கிழமை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலை 9.00 மணிக்கு ஒட்டாவாவில் உள்ள கால்ரன் பல்கலைக்கழக மின்ரோ சென்றரில் அமைந்துள்ள பெல் மாநாட்டு அரங்கில் மாநாடு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. கனடிய தேசியகீதம், மங்கள விளக் கேற்றல் எனத் தொடர்ந்த சம்பிர தாயங்களைத் தொடர்ந்து மாணவத் தலைவர்கள் உரையாற்றினர். கால் ரன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் தலைவர் ஜோ பெல் பென் டையினின் உரையைத் தொடர்ந்து, தமிழர் தாயக அவலங்கள், கனடியத் தமிழர்கள் என இருவேறு விடயங் கள் மின்கணனி உதவி கொண்டு திரையில் காண்பிக்கப்பட்டமை வெகு சிறப்பாக அமைந்தது.

தொடர்ந்து தமிழர் தாயகத்தில் தான் அண்மையில் கண்டதை அருச் சுனன் என்னும் அமெரிக்க வாழ் தமிழ் மாணவன் தெரி வித்தான். குறிப்பாக இளையவர்கள் படும் அவலங்களை விவரித் தான். வன்னி உட்பட வடக்கு, தென் தமிழீ ழத்தில் பல பகுதிக ளுக்கும் இம் மாண வன் அண்மையில் சென்றுள்ளான். தமது உரையின் இறுதியில் தான் விடைபெறும் போது ஒரு 16 வயது மாணவி ஓடிவந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு எம் நிலை தெரியுமா? என வினவிவிட்டு "எங் களை மறந்து விடாதீர்கள்" என தெரிவித்ததாகக் கூறியபோது கண்கள் பனிக்க அரங்கில் மயான அமைதி நிலவியது.









அடுத்து மாநாட்டின் முக்கிய உரையை அருட்தந்தை ஏ.ஜே.இமானு வேல் அடிகளார் அவர்கள் நிகழ்த் தினார். தமிழர் தேசிய இனப்பிரச் சினைத் தீர்வில் சர்வதேச சமூகத்தின் தார்மீக பங்கு என்னும் தலைப்பில் அவர் உரை அமைந்தது. தொடர்ந்த தேநீர் இடைவேளையை அடுத்து போர்ப்பூமியில் மக்களின் நிலை என் னும் தலைப்பிலான முதல் ஆய்வரங் கம் நடைபெற்றது. றோயல் கனடிய ன் கடற்படையில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரி கரி வைஸ்மன் தலைமையில் இவ்வரங்கம் நடை பெற்றது. இதில் இலங்கையில் இருந்து வந்து கலந்துகொண்ட டாக்டர் சச்சிதானந்தம் சதானந்தன், "கொச வாவுக்கும், தமிழருக்கும் உள்ள ஒற்று மைகள்" என்னும் தலைப்பில் உரை யாற்றினார்.

அடுத்து றொரன்ரோ பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அருட்தந்தை ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள், "தமிழ் மக்களின் பாரிய இடப்பெயர் வும், அதன் தாக்கங்களும்" என்னும் தலைப்பில், போரின் கோரத்தால் தொடர்ந்த மக்கள் இடப்பெயர்வுக ளையும், மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல்கள் குறித்தும் தாம் நேரடியாகக் கண்டவற்றை சிறப்புற எடுத்துரைத்தார். பல தரு ணங்களில் அவர் உண்மைச் சம்ப வங்களின் கோரத்தை எடுத்தியம்பிய போது அனைவரும் கனத்த மனங் களுடன் இவ்வாறு மக்களின் துன்ப துயரங்கள் தொடர்வதை நாம் அனு மதிக்கலாமா? எனத் தமக்குள் ஒரு முறை கேட்டுக் கொண்டனர்.

அடுத்து நியூயோர்க்கின் இலங்கை தமிழ் சங்கத்தைச் சேர்ந்த ஏவிஸ் கரல் சிறீஜெயந்தா என்னும் பெண் மணி "தமிழர் தாயகத்தில் மனிதப் புதைகுழிகள்" என்னும் தலைப்பில், படங்கள் தரவுகள் கொண்டு உரை யாற்றினார். அடுத்து மன்சஸ்ரர், இங்கிலாந்தில் இருந்து வந்து கலந்து கொண்ட மனித உரிமை வாதியான டியற்றி மக்கோனல், "போர்க் களங் களில் பெண்கள், சிறுவர்கள்" என் னும் தலைப்பில் உரையாற்றினார். தொடர்ந்து நடைபெற்ற கேள்வி நேரத்தை தொடர்ந்து காலை நிகழ் வுகள் முடிவுக்கு வந்தன.

மதிய இடைவேளையைத் தொடர்ந்து "தமிழ் மக்களின் உரிமைகளும், பாது காப்பும், அதற்கான உத்தரவாதமும்" என்ற தலைப்பிலான இரண்டாவது ஆய்வரங்கம் நடைபெற்றது. ஒட் டாவா பல்கலைக்கழகத்தின் பேராசி ரியர் போனி லீனா தலைமையில் இவ் ஆய்வரங்கம் நடைபெற்றது. முதலில் நியூசிலாந்தின் மாசே பல் கலைக்கழக பேராசிரியர் மாகிரெட் றாவிக் உரையாற்றினார். "கொக்கட் டிச் சோலை தமிழ்க் கிராமத்துப் படுகொலையும், அதன் தாக்கங்க ளும்" என்னும் தலைப்பிலான இவ ரது உரையில், தாம் நேரடியாக கண்ட காட்சிகள், எதிர்கொண்ட சவால்கள் எனப் பலவற்றை விரி வாக எடுத்துரைத்தார். இவர் தென் தமிழீழத்தில் கணிசமான காலம் வசித்தவர் என்பதுடன் தமிழிலும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓரளவு உரையாடக்கூடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து தமிழர் தேசியப் பிரச்சினை குறித்த தற்போதைய அரசியல் நிலமை பற்றி இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் உரையாற்றினார். அடுத்து ஜேர்மன் இபகாட் கார்லஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ஜோன் நெல்சன் "சிறீலங்காவில் மனித உரிமை மீறல்கள் குறித்த எனது பார்வைகள்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். அடுத்து யூத மக்கள் நாசி ஜேர்மனியில் பெற்ற அனுபவங்களினூடாக சிறீலங்காவில் எவற்றில் நாம் கவனமாக இருக்கவேண்டும் என்னும் விடயம் குறித்து யூத மக்களின் பேனாய் பிரித் அமைப்பின் ஒட்டாவா பிரதிநிதி ருபின் பிரிட்மன் உரையாற்றினார்.

தொடர்ந்த தேநீர் இடைவேளையை அடுத்து போர்க்கள சூழலில் மூன்றாவது ஆய்வரங்கம் நடைபெற்றது. மேரிலண்ட், அமெரிக்காவில், வயர்லஸ் டிசைன்& கொம்யூனிகேசனின் தலைவர் நிறைவேற்று அதிகாரி பதவியில் உள்ள முத்துத்தம்பி சிறீதரன் தலைமையில் இவ்வாய்வரங்கம் நடைபெற்றது. முதலில் பேசியவர் பேச்சு பலரின் கவனத்தையும் ஈர்ந்தது. சந்திரிகா அரச பத்திரிகையான டெய்லி நியூசில் மாநாடு முதற் பக்க முக்கிய செய்தியாவதற்கும் காரண



**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அவசியத்தை வலியுறுத்தி அதனூடு சமாதானத்தை தேடும் சர்வதேச ஒழுங்கை சந்திரிகா அரசும் கைக் கொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.**



கர்த்தா இவர்தான். யார் எனக் குழம்புகின்றீர்களா? ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகி, இவ் வருட ஆரம்பத்தில் மடு சென்ற போது விடுதலைப்புலிகளைச் சந்தித்தார் என பெரும் பீதி கிளப்பப்பட்ட டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனவே அவர்.

இவர் "வன்னியில் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் மருத்துவ தேவைகள் குறித்த ஒரு நேரடி கணிப்பு" என்னும் தலைப்பில் உரையாற்றினார். வன்னி சென்று மக்கள் அவலங்களை நேரில் கண்டவர் என்பது மட்டுமன்றி மருத்துவ டாக்டர் என்ற ரீதியில் விரிவாக தரவுகளுடன் தனது பக்க வாதங்களை எடுத்தியம்பினார். அடுத்து பேச எழுந்துவரும் ஒரு இலங்கை பாராளுமன்ற உறுப்பினர். ஆனால் இவர் தமிழர். மட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் அடுத்து உரையாற்றினார். "இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட சிவில் நிர்வாகத்தில் தமிழர் வாழ்வு" என்னும் தலைப்பில் இவர் உரை அமைந்தது.

தொடர்ந்த கேள்வி நேரத்தைத் தொடர்ந்து முதல்நாள் நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் மே 22–ம் நாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகின. "மனித உரிமை மீறல்கள்" என்ற தலைப்பிலான ஆய்வரங்கம், கால்ரன் பல்கலைக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கழக பேராசிரியர் பில் ஸ்கிட்மோர் தலைமையில் நடைபெற்றது. முதலில் பிரபல சட்டத்தரணி பாபரா ஜக்மன் அவர்கள் தனது ஆய்வுரையை நிகழ்த்தினார். "தமிழ் மக்கள் மீதான அடிப்படை மனித உரிமை மீறல்கள்" என்னும் தலைப்பில் அவர் உரை அமைந்தது.

அடுத்து சிறீலங்காவின் நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், ஐக்கிய இடதுசாரி முன்னணியின் தலைவருமான பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரட்ணா உரையாற்றினார். தமிழ் மக்களின் உரிமைகளும், பாதுகாப்பும் என்னும் தலைப்பில் இவர் உரை அமைந்தது. சிங்கள தேசத்தின் முற்போக்காளர் என வர்ணிக்கப்படும் இவரின் உரை பலராலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது.

அடுத்து அவுஸ்ரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா போர் மக்கள் வாழ்வியலில் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் குறித்து உரை நிகழ்த்தினார். அதனையடுத்து விளையாட்டுக் களத்தில் அன்று சாதனை படைத்த பேராசிரியர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் உரை நிகழ்த்தினார். தமிழ் மாணவர்களின் கல்வியில் போர் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் குறித்து உரையாற்றினார். இவர் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் நகரைத் தற்போது வதிவிடமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"மக்கள் தொடர்பு சாதனங்களும் அவற்றின் செயற்பாடும் குறித்து அடுத்து அமைந்த ஆய்வரங்கம் ஆராய்ந்தது. கனடிய மனிதவள அமைச்சின் தொடர்புசாதன ஆலோசகர் திருமதி ஜெனட் கோன் தலைமையில் இவ் ஆய்வரங்கம் அமைந்தது. இதில் முன்னாள் ரூபவாகினி தொலைக்காட்சி பணிப்பாளரும், லண்டன் பி.பி.சி சிங்கள சேவையின் இணைப்பாளருமாகிய வசந்தராஜா மற்றும் சிறீலங்கா ஆங்கிலப் பத்திரிகைகளான சண்டே ரைம்ஸ் வீக்கென்ட் மிரர் ஆகியவற்றில் "தராகி" என்னும் பெயரில் இராணுவக் கட்டுரைகள் வரையும் தர்மரட்ணம் சிவராம் ஆகியோர் முக்கிய உரை நிகழ்த்தினர்.

மதிய இடைவேளையைத் தொடர்ந்து "பிரச்சினைத் தீர்வுகள்" என்னும் தலைப்பில் இறுதி ஆய்வரங்கம் நடைபெற்றது. கால்ரன் பல்கலைக் கழக பேராசிரியர் ஜோசப் மெனியோனி தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வரங்கில் சரித்திரசான்றுகளுடன் கூடிய உரைகளை அமெரிக்காவின் வின்கொன்சின் பல்கலைக் கழகப் பேராசிரியர் செல்லத்துரை மனோகரன் மற்றும் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சால்க் ஆகியோர் நிகழ்த்தினர்.

சந்திரிகா அரசின் தீர்வுப் பொதி ஏன் நடைமுறைக்கு பொருந்தாது என்பது குறித்து டாக்டர் சச்சிதானந்தன் உரையாற்றினார். இறுதியில் அமைந்த விசுவநாதன் உருத்திரகுமாரின் உரை பலராலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை உறுதியாக பிரதிபலிப்பதாக அவர் உரை அமைந்தது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அவசியத்தை வலியுறுத்தி அதனூடு சமாதானத்தை தேடும் சர்வதேச ஒழுங்கை சந்திரிகா அரசும் கைக் கொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இம்மாநாட்டில் வெளிநாடுகளில் இருந்து வந்த மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தில் இருந்து வந்த சிறீலங்கா தூதரக அதிகாரி, தென் ஆபிரிக்காவில் இருந்து வந்த தமிழீழ விடுதலை ஆதரவு அமைப்புக்களைச் சேர்ந்த நான்கு தென் ஆபிரிக்கத் தமிழர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். மாநாட்டுப் படங்கள், உரைகள் என்பன உடனுக்குடன் மின் கணணி தொடர் வலையினூடாக சர்வதேசமெங்கும் அனுப்பப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இறுதியில் மாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்கவேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப்பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகிறது.

**தமிழீழத் தேசியத்தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கு, கிழக்கில் இராணுவ சர்வாதிகாரம்



வடகீழ்த் தமிழப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாகவும் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுவதாகவும் இலங்கை அரசாங்கம் உலகளாவிய ரீதியில் கோபேல்சியப் பிரசாரம் செய்துவருகின்றது. ஆனால் யதார்த்த நிலை என்னவென்பது தென் இலங்கையில் வதியும் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத் தமிழ்ச் சமுதாயத்துக்கும் சரிவரத் தெரியாது என்பதே எமது நிலைப்பாடு. இதேவேளையில் தென் இலங்கையில் இராணுவச் சர்வாதிகாரம் இல்லையென்பதும் எமது கணிப்பு.

வடகீழப் பிராந்தியங்களில் பெயரளவில் இராணுவச் சட்டம் இல்லையென்றாலும் செயலளவில் வடகீழ்ப் பிராந்திய மடங்கிலும் உலகிலுள்ள பொதுவான இராணுவச் சட்டங்களுக்கு வருகின்றன. இவற்றுக்கெல்லாம் தமிழ் மக்கள் முகங்கொடுத்த வண்ணம் இருக்கின்றனர். முதலில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கென அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படும் உலர் உணவு கூட அவர்களுக்குச் சரியாகச் சென்றடைவதில்லை. மருந்து வகைகளும் அவர்களைச் சென்றடைவதில்லை. இவற்றுக்கான காரணம் இராணுவத்தினரின் செயற்பாடுகளே. சட்ட ரீதியில் அல்லது மனிதாபிமான அடிப்படையில் இச் செயற்பாடுகளை இராணுவம் நியாயப்படுத்த முடியாது. இராணுவக் கட்டுப்பாட்டில்

> அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கவில்லை. அதற்கு மாறாக இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் வாட்டிவதைக்கப் படுகின்றனர்.

வாழும் மக்களுக்கு ஒரு நீதியும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் மக்களுக்கென இன்னொரு நீதியும் இலங்கைச் சட்டத்தில் இல்லை. ஆனால் நடைமுறையில் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு இராணுவம் தன்னிச்சையாக தமிழ் மக்களுக்கு எதிராக மிகக் கொடூரமான செயற்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றது. இதனைத் தட்டிக் கேட்கும் துணிவு நமது தமிழ்க் கட்சிகளுக்கில்லை. இலங்கை அரசாங்கமும் இராணுவமும் இவ்வாறு செயற்படுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, தமிழ் மக்களுக்கான உணவுப் பண்டங்கள், மருந்து வகைகள் மற்றும் கல்வி உபகரணங்களை அனுப்பி வைப்பதற்குப் பல சந்தர்ப்பங்களில் தடை விதித்தனர். இவ்வாறு தடை விதிப்பதனால் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியுறும். மருந்து வகைகளைத் தடை செய்வதால் தமிழ் மக்களின் சுகாதார வசதிகள் சீர்குலைந்து, தொற்று நோய்கள் பரவி, போசாக்கின்றி வருந்தி மரணத்துக்காளாவர். உணவு வகைகளைத் தடைசெய்தால் பட்டினியால் தமிழ் மக்கள் இறந்துவிடுவர். எனவே, இவையாவும் இன ஒழிப்பு நடவடிக்கையாகும். இந் நடவடிக்கைகள் ஐ.நா.சாசனத்துக்கு முரணானவையாகும். இக் குற்றவியல் நீதிமன்றத்தில் முறையிடலாம், குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படலாம்.

**தில்லைக்கூத்தன்**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென் இலங்கையில் ஜனநாயகம்?

இரண்டாவது காரணம், இவ்வாறான கொடூரமான தடைகளை அமுல்படுத்தினால் இராணுவக் கட்டுப்பாடற்ற தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இக் கொடுமைகளைத் தாங்கமுடியாது அங்கிருந்து வெளியேறிவிடுவர். அவ்விதம் அதிகளவில் மக்கள் வெளியேறுகையில் விடுதலைப் புலிகளின் பலம் குறைந்துவிடுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அதனால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கென ஒரு யுத்தம் வியூகமாகவும் இவ்வண்ணம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கவில்லை. அதற்கு மாறாக இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் வாட்டிவதைக்கப்படுகின்றனர், என்பதே எமது கணிப்பு. இவ்வாறான இராணுவச் சர்வாதிகார அணுகுமுறை ஜனநாயக சம்பிரதாயத்துக்கு முரணானதாகும். இவ்வாறு கொடுமையான இராணுவச் சட்ட திட்டங்கள் சிங்கள மக்கள் மீது ஒருபோதும் திணிக்கப்பட்டதில்லை.



தமிழ் பிள்ளைகள் கல்வி கற்கக் கூடாது. கல்வியினால் அவர்கள் முன்னேற்றம் அடைந்துவிடக்கூடாது என்பது சிங்களப் பேரினவாதத்தினதும் இராணுவத்தினதும் நிலைப்பாடாகும். யாழ்ப்பாணத்தில் ஆசியாவின் மிக முக்கியமான நூல் நிலையம் எரிக்கப்பட்டதற்கு இதுவே காரணமாகும். வன்னிப் பிரதேசத்துக்கும் யாழ்ப் பிராந்தியத்துக்கும் கல்வி உபகரணங்களை அனுப்புவதற்கும் இராணுவத்தினாலும் அரசாங்கத்தாலும் பல முட்டுக்கட்டைகளும் தடைகளும் போடப்படுகின்றன.

பாடசாலைப் பிள்ளைகளின் கல்விக்குதவும் ஒரு வெண் கட்டியைத் (சோக்) தானும் இராணுவ அனுமதியின்றி வன்னிப் பிரதேசத்துக்குக் கொண்டுசெல்ல முடியாது. தமது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் பெற்றோர்கள் அவர்களை ரியூசனுக்கு அனுப்பி வைக்கின்றனர். இவ்வாறான பிரத்தியேகப் படிப்பினால் மாணவர் முன்னேற்றமடைவர். அதனையும் இராணுவத்தினர் தடை செய்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ்ப் பிரதேசத்தின் அனேக பகுதிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகள் என அரசாங்கத்தினாற் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் அங்கெல்லாம் சோதனைச் சாவடிகளை அமைத்து இராணுவத்தினரைக் குவித்து வைத்திருப்பது எதற்காக? நாம் அறிந்த வரையில் நடைமுறையில் சகல தமிழ் மக்களும் இராணுவத்தினரின் சட்ட திட்டங்களுக்கேற்பவே செயற்படுதல் வேண்டும். பெயரளவுக்குச் சிவில் அலுவர்கள் இருந்த போதிலும் சகல சிவில் அதிகாரங்களும் இராணுவத்திடமே உள்ளது. இதன் பலனாக யாழ் மாவட்டத்திலோ ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலோ சிவில் அலுவலர்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயங்களை யாழ்ப் பிரமுகர்கள் இராணுவத்திடமே முறையிடுகின்றனர். இதிலிருந்து தமிழ்ப் பிராந்தியங்களில் இராணுவ ஆட்சிதான் நிலவுகின்றது என்பதைத் தென் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கும் சர்வதேச தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆணித்தரமாகக் கூறவிரும்புகின்றோம்.

உதாரணமாக அண்மையில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அலுவலகக் கடமைகளுக்குச் செல்லக் கூடாதெனக் கட்டளையிட்டிருந்தனர். முன்னைய அனுபவங்களைக் கொண்டு குறிப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> தமிழ் மண்ணில் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கும் வரை நிரந்தர சமாதானம் ஏற்படப் போவதில்லை என்பது எமது கணிப்பு. இலட்சக் கணக்காக இராணுவத்தினரைக் குவித்தாலும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியற் தீர்வொன்று காணப்படும் வரை சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்பதும் எமது கணிப்பாகும்




பிட்ட அவ்விரு தினங்களிலும் அரசாங்க அலுவலர்கள் கடமைக்குச் செல்லவில்லை. விடுதலைப் புலிகளின் கட்டளையைப் பொருட்படுத்தாது கடமைக்குச் செல்லுமாறு இராணுவத்தினர் புத்திமதி கூறியிருந்தனர். அப் புத்திமதிகளை அரசாங்க அலுவலர்கள் செவிமடுக்கவில்லை. அதன் பின்னர் இராணுவத்தினர் கடும் போக்கைக் கடைப்பிடித்தனர். அதாவது கடமைகளுக்குச் செல்லாதோர் வருடக் கணக்காகச் சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டிவருமென மிரட்டினர். இவ்வாறான கடும் போக்கினை எந்தச் சட்டத்தின் கீழ் இராணுவத்தினர் கடைப்பிடித்தனர் என்பது தெரியாது. எனினும், திரும்பவும் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளிலும் கடமைகளுக்குப் போகலாம் என விடுதலைப் புலிகள் கடிதம் அனுப்பியிருந்தார்கள் என அறிந்தோம். ஜே.வி.பி–யினரின் கிளர்ச்சிக் காலத்தில் கடமைகளுக்குச் செல்லக்கூடாதென பல உயர் அலுவலர்களுக்குக் கட்டளையிட்டிருந்தனர். அக்கட்டளைகளுக்குப் பயந்து அனேக அனுவலர்கள் கடமைக்குச் செல்லவில்லை. அத்தருணத்தில் கடமைக்குச் சென்றிருக்காத அலுவலர்கள் மீது இலங்கை அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் அதேபோன்றதொரு சூழ்நிலையில், சிறைவாசம் அனுபவிக்க வேண்டிவருமென்ற மிரட்டல்கள் தமிழ் அரசாங்க அலுவலகர்களுக்கு விடுக்கப்பட்ட இன ரீதியான இப் பாரபட்சத்தை நியாயப்படுத்த முடியாது.

இவ்விதமான கொடுங்கோன்மை தமிழ்ப் பிராந்தியங்களில் நடைபெறுவதனால் மக்கள் தாங்க முடியாத அவலங்களுக்கு ஆளாவதால், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல, தமிழ்த் தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் முற்றாக விலகவேண்டுமெனவும், இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் குரலெழுப்பியிருந்தன. இதே தோரணையில் தமிழ் நாட்டிலும் குரலெழுப்பத் தொடங்கிவிட்டனர். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் இனப் படுகொலை யாவும் கொசோவாவில் நடைபெற்றதைவிட மிகவும் மோசமானவையென உலகப் பிரசித்தி பெற்ற முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சரான ஹென்றி கீஸிங்கர் அழுத்தமாகக் கூறியிருந்தார்.

கடந்தவாரம் அவுஸ்ரேலிய பாராளுமன்றத்தில் திரு.மேர்பி என்பவர் இலங்கையில் தமிழ் மக்களுக்கெதி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> தமிழ் மண்ணைக் காப்பாற்றுவதற்காகப் 16 வருடங்கள் அல்ல 160 வருடங்களாயினும் சரி தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தியாகங்கள் செய்யப் பின்னிற்கப் போவதில்லை. இந்த உண்மையை சிங்களப் பேரினவாதம் உணர முற்பட்டால் இலங்கையில் சமாதானம் ஏற்படும் வழி பிறக்கும் என்பது எமது கணிப்பு

ராக நடைபெறும் சம்பவங்களை கொசோவாவில் நடைபெற்ற சம்பவங்களோடு ஒப்பிட்டுக் கூறியிருந்ததோடு, இது தொடர்பாக அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார். தமிழர்களுக்கெதிரான கொடூரமான சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டே 21 வெளிநாட்டு அரசாங்கங்கள், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை மறந்து ஓர் அரசியற் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அதற்காக மத்தியஸ்தம் வகிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்திருந்தனர். வட, கிழ்ப் பிராந்தியங்களில் நடைபெறும் இராணுவ சர்வாதிகாரத்தை உலக மக்கள் நன்கு அறிந்துவிட்டனர் என்பதனை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரால் நடாத்தப்படும் கொபேல்சிய பிரசாரம் சர்வதேச அரங்கில் எடுபடவில்லை என்பதனையும் இது காட்டுகின்றது.

இத்தருணத்தில், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நமது தமிழ்க் கட்சிகளோ, தமிழ்ப் பிரதிநிதிகளோ அல்லது அரசியற் பிரமுகரோ தமிழ்த் தாயகத்தின் மீது திணிக்கப்பட்ட இராணுவ ஆட்சி ஒழிக்கப்பட வேண்டுமெனவோ, இராணுவம் வடகீழ்ப் பிராந்தியங்களிலிருந்து முற்றாக விலக்கப்பட வேண்டுமெனவோ அன்றேல் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமெனவோ அழுத்தம் கொடுக்கவில்லை என்பதை நினைத்து மிகவும் வேதனைப்படுகின்றோம்.

தமிழ் மண்ணில் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கும் வரை நிரந்தர சமாதானம் ஏற்படப் போவதில்லை என்பது எமது கணிப்பு. இலட்சக் கணக்காக இராணுவத்தினரைக் குவித்தாலும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியற் தீர்வொன்று காணப்படும் வரை சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்பதும் எமது கணிப்பாகும்.

அண்மையில் கனடாவில் நடந்தேறிய மகாநாட்டில் இது தொடர்பாக நன்கு ஆராயப்பட்டது. இன்று 21 நாடுகளின் அரசாங்கங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கலாம். நாளை 100 நாடுகளின் அரசாங்கங்கள் அழுத்தம் கொடுக்கலாம். எத்தனை நாட்களுக்குத்தான் இலங்கை அரசாங்கம் அனைவரையும் ஏமாற்ற முடியும்? ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூற முடியும். அதாவது தமிழ் மண்ணைக் காப்பாற்றுவதற்காகப் 16 வருடங்கள் அல்ல 160 வருடங்களாயினும் சரி தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தியாகங்கள் செய்யப் பின்னிற்கப் போவதில்லை. இந்த உண்மையை சிங்களப் பேரினவாதம் உணர முற்பட்டால் இலங்கையில் சமாதானம் ஏற்படும் வழி பிறக்கும் என்பது எமது கணிப்பு.

மலைநாட்டுத் தமிழர்களுக்கெதிராகவும் இன்று சிங்களப் பேரினவாதம் தலை தூக்குகின்றது. கொழும்பில் தமிழ் மக்கள் வாழக்கூடாதெனவும் கூச்சலிடுகின்றது. இப் பேரினவாதத்தால் காலப் போக்கில் நாடே அழிந்துபோகும் நிலை தோன்றலாம். எனவே, வட கிழக்குத் தமிழ்த் தாயகத்திலிருந்த இராணுவத்தை அகற்றி நீதியான அரசியல் தீர்வொன்றுக்கு வருவதன் மூலமே நாட்டைக் காப்பாற்ற முடியும்.

■

## உண்மை

ஐங்கரன்

உருக்குலைந்து போனவர்கள்
விழிபிதுங்கும்
குழி முயல்களாய்...
பெரு நரிகள்
சுருக்குக் கயிற்றுடன்
சுற்றி வர
பசும் புல்லைப்
பார்த்து நிற்பவர்களுக்கு
சில காய்ந்த கட்டைகளும்
பல சருகு குப்பைகளும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இழந்த பிரதேசத்தை மீட்பதே எமது அடுத்தகட்ட நகர்வு

**தேசியத் தலைவர் அவர்களினால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் எந்தவொரு இராணுவ நகர்வும் தமிழீழத்தை நோக்கியதாகத் தான் நகர்ந்துகொண்டிருக்கின்றது.**

## தளபதி தீபன்

நாம் எதிரிகளை தடுத்து நிறுத்தி பாதுகாப்பு வேலிகளை அமைத்துள்ளோம். இனி எதிரிகளை அடித்து விரட்டுவது தான் எமது பணியாக இருக்கும். களமுனைக்கு சென்ற முள்ளிய





வளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் முன் உரையாற்றிய தளபதி தீபன் மேலும் தெரிவிக்கையில், இன்று உண்மையிலேயே எதிரியானவன் போராளிகள் நிற்கும் பகுதிகளை நோக்கி எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளமுடியாத அளவிற்கு எங்களின் இராணுவ ஆற்றல் வளர்ச்சி கண்டுள்ளது. எதிரி எமது பாதுகாப்பு வேலியைத் தாண்டி வரமுடியாதளவிற்கு நாம் பலமடைந்துள்ளோம். எதிரி இன்று எந்த இடத்தை நோக்கி முன்னேறியுள்ளான் அல்லது ஆக்கிரமித்துள்ளான் என்று பார்த்தால் உண்மை விளங்கும். இன்று எதிரியின் மனநிலையைப் பொறுத்தவரையில் எங்கு போராளிகள் இல்லையோ அந்த இடத்தைத்தான் படைகளை நகர்த்தி இடங்களை ஆக்கிரமிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகப் போராளிகள் நிற்கும் எந்தவொரு பிரதேசத்தையும் படையை நகர்த்தி ஆக்கிரமிக்கக்கூடிய துணிவு எதிரியிடம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







இல்லை. இந்தப் போரில் நாங்கள் நிச்சயம் வெல்வோம் எங்கள் படையணியைப் பெருக்குவதன் மூலம் எதிரியின் ஆக்கிரமிப்பைத் தடுக்க முடியும். இன்று தேசியத் தலைவர் அவர்களினால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் எந்தவொரு இராணுவ நகர்வும் தமிழீழத்தை நோக்கியதாகத் தான் நகர்ந்துகொண்டுள்ளது. இனி போராளிகளின் ஒவ்வோர் நகர்வும் இழந்த பிரதேசத்தை மீட்பதற்காகத் தான் அமையப்போகின்றது. இனி எந்தவொரு பிரதேசத்தையும் இழக்க முடியாத அளவுக்குத்தான் எமது பலத்தைப் பெருக்கவேண்டும். இவ்வாறு தளபதி தீபன் அவர்கள் தெரிவித்துள்ளார்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளுடன் ஒப்பிடக்கூடிய போராளிகள் வியட்னாம், எரித்திரிய போராளிகள் மட்டுமே

**அரசியல் விமர்சகர் றொகான் குணரட்ண**

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுடன் ஒப்பிடக்கூடிய ளவிற்கு வியட்னாம், எரித்திரிய விடு தலைப் போராளிகளே திறமையுடன் செயற்பட்டுள்ளனர். அதுபோல உலகில் சக்திமிகு கடற்படையைக் கொண்ட கெரில்லாக்களும் புலிகளே என அரசியல் விமர்சகர் றெகான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 'புதிய ஒழுங்கு முறையின் கீழ் இனப்பிரச்சினை' என்னும் தலைப்பில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் மனிதாபி மான நோக்கங்களுக்காக நிதி சேகரிப்பதற்கு அமெரிக்க நீதிமன்றம்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுமதி வழங்கியுள்ளது. இது விடுதலைப்புலிகளுக்குச் சட்ட ரீதியாக கிடைத்துள்ள பெரு வெற்றி ஆகும். இத் தீர்ப்பு அமெரிக்கா, மலேசியா அரசுகள் புலிகளுக்கு எதிராக விதித்துள்ள தடைகளிலும் தாக்கம் ஏற்படுத்தக்கூடும். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முன்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்தவர்களில் அனேகமானவர்கள் விடுதலை செய்யப்பட்டதும் புலிகளுக்குக் கிடைத்துள்ள வெற்றியே. அரசியல் அரங்கிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் போன்றவர்களும் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் போன்ற அமைப்பைச் சேர்ந்தவர்களும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவை வழங்குகின்றனர்.

சர்வதேச ரீதியில் மிகத் திறமையான தகவல் தொழில்நுட்ப அமைப்பினைக் கொண்ட அமைப்பும் விடுதலைப்புலிகளே. அதுபோல் சக்தி மிக்க கடற்படையைக் கொண்ட கெரில்லாக்களும் அவர்களே. சர்வதேச ரீதியாக ஆறு போராளி இயக்கங்கள் தற்கொடைக் குண்டுத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றன. அவற்றில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களே மிகவும் திறமையானவையாகவுள்ளன.

> தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புகள் தோன்றுவதற்கு ஜனநாயகத்தை சரியான முறையில் அமுல்படுத்தாமையே காரணம்

வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் இனப்பிரச்சினை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இனப்பிரச்சினைக்கு காரணமான அரசியல் தலைவர்களோ அப்பிரச்சினையை அலட்சியப்படுத்தும் விதத்தில் செயற்படுகின்றனர்.

நாட்டின் நீண்டகால நலன்களுக்காகத் தங்களின் நலன்களைத் தியாகம் செய்யக்கூடிய உண்மையான தலைவர்கள் எவரையும் பெரும்பான்மை சமூகத்தில் காண முடியவில்லை. காலம் கடந்து வழங்கப்படுகின்ற அதிகாரப் பகிர்வுத் திட்டங்கள் பலனளிக்காது போகக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புகள் தோன்றுவதற்கு ஜனநாயகத்தை சரியான முறையில் அமுல்படுத்தாமையே காரணம் என றொகான் குணரட்ண மேலும் தெரிவித்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆக்கிரமிப்பு நிர்வாகம் அங்கீகரிக்கப் பட்டதாக வரலாறு கிடையாது

தமது ஆதிக்கவெறி கருதி ஆக்கிரமிப்புக்களை அரசுகள் அண்டை நாடுகளின் மீது மேற்கொள்கின்றன. பின்னர் தமது ஆக்கிரமிப்பு நிர்வாகத்தை அங்கு ஏற்படுத்தி இயல்பு நிலை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயல்வது வழக்கம். எனினும் ஆக்கிரமிப்புச் செய்த நாட்டின் எதிரணி நாடுகள் ஆக்கிரமிப்பு என தொடர்ந்தும் கூக்குரலிடவே செய்யும். இந் நிலையில் ஆக்கிரமிப்புக்குட்பட்ட நாட்டின் மக்களில் துரோகத்துக்கு தயாராகவுள்ள ஒரு சிறு கும்பலை அந் நிர்வாகத்தை நடாத்துபவர்களாக சித்தரிக்க ஆக்கிரமிப்பு அரசு முயலும். இதனூடாக தாம் அடக்குமுறை ஆட்சி செய்வதை வார்த்தையளவிலாவது மறைத்துக்கொள்ள முயலும்.

ஈராக் அரசு குவைத் நாடு தனது நாட்டின் ஓர் அங்கமெனக் கூறி திடீரென ஆக்கிரமிப்பு ஒன்றை மேற்கொண்டது. அந் நாட்டு மக்களில் பலரும் ஓடித் தப்பிக் கொண்டனர். குவைத் நாட்டின் வளங்களைக் கருத்தில் கொண்ட மேற்குலக நாடுகள் பெரும் படை திரட்டி படைபல நவீனத்தின் துணை கொண்டு அரபுலகப் படைகளை முன்னிறுத்தி குவைத்தை மீட்டன. ஆதரவு ஆப்கான் அரசிற்கு உதவி என்ற போர்வையில் பெரும் படை பலத்துடன் உள் நுழைந்தன சோவியத் படைகள். ஆக்கிரமிப்பு என அமெரிக்கா தலைமையில் கூக்குரலிட்டன மேற்குலக நாடுகள். தமது ஆதரவு உள்ளூர் தலைமை ஒன்றை ஆட்சியில் அமர்த்தி ஆக்கிரமிப்பு வாதத்தை மழுங்கடிக்க முயன்றது சோவியத் அரசு.

இது சமீப காலங்களில் நாடு ஒன்று அண்டைய நாடு ஒன்றின் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு அங்கீகரிக்கப்படாத செயற்பாட்டை சுட்டி நிற்கின்றது. இதே போன்று சுதந்திர மக்கள் மீதான ஆக்கிரமிப்பு ஆட்சியை அம் மக்கள் முழுமையாக நிராகரித்தமையும் வரலாறு எமக்குக் கற்றுத் தரும் பாடமாகும். பலஸ்தீன தேசத்தின் மீது இஸ்ரேல் நாடு ஆக்கிரமிப்புச் செய்து அவர்களை ஆள முற்பட்டதை அம்மக்கள் இறுதி வரை ஏற்றுக்கொள்ளவில்லை. இதே போன்று தென்னாபிரிக்க பெரும்பான்மை கறுப்பு இன மக்களை அந்நாட்டின் குடியேறிகளான சிறுபான்மை வெள்ளை இன மக்கள் அடக்கி ஆள முற்பட்டனர்.

தென் ஆபிரிக்காவில் வளமற்ற பகுதிகளில் சிறு சுயாட்சிப் பிரதேசங்கள் அமைக்கப்பட்டன. அதே வேளை தொடர்ச்சியற்றவையாக அவை பேணப்பட்டன. இவற்றினுள் கறுப்பின மக்களைத் தள்ள பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. அவற்றின் ஆட்சியுரிமையை தமக்கு ஆதரவான சிறு கறுப்பின குழுக்களிடம் வழங்கியது. இவ்வாறு உலகை ஏமாற்ற முனைந்தன, அன்றைய இனவெறி வெள்ளை அரசுகள்.

ஆனால் தென்னாபிரிக்க மக்களும், அவர்கள் விடுதலை அமைப்பான தென்னாபிரிக்க தேசிய காங்கிரசும் அதனை முழுமையாக நிராகரித்ததால் இனவெறி அரசின் ஏமாற்றுவித்தை பிசுபிசுத்து விட்டது. அவர்களது உறுதியால் இன்று தென்னாபிரிக்க மக்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்யும் நிலையில் சுதந்திர இறைமை பெற்ற மக்களாக உள்ளனர்.

இதேவேளை கிழக்கு திமோர் மக்கள் இந்தோனேசிய ஆக்கிரமிப்பு ஆட்சிக்கு உட்பட்டு நிற்பதுவும், தீபெத் மக்கள் சீன ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு நிற்பதுவும் சமகால நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்கவை. இங்கு ஆக்கிரமிப்பு அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட உள்ளூர் ஆட்சி முறைகளை அம் மக்கள் நிராகரித்து நிற்கின்றமை அவர்களது சுதந்திர இறைமை வேண்டிய நியாயபூர்வமான போராட்டத்திற்கு வலிமை சேர்த்து நிற்கின்றது. அதே வேளை மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு நாடுகளான சீனாவும், இந்தோனேசியாவும் உலக பொருளாதார ஒழுங்கில் இன்றைய சூழலில் முக்கிய அங்கங்களாகத் திகழ்வதால் அவற்றின் மீதான சர்வதேச அழுத்தம் குறைந்து காணப்படுவதும் கண்கூடு. எனினும் சமீப காலத்தில் இந்தோனேசிய நாட்டில் ஏற்பட்டுள்ள உள்ளூர் குழப்பங்களும், பொருளாதாரச் சரிவும் கிழக்குதிமோர் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் காலம் தொலைவில் இல்லை என்பதைக் கட்டியம் கூறி நிற்கின்றன.

இந் நிலையில் இருந்து தமிழீழ

**நிலவன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களின் நிலையையும், சிங்கள ஆக்கிரமிப்பு அரசின் ஆக்கிரமிப்பு நிர்வாகத்தையும் நோக்குவோம். தமிழர் தேசம் தமிழீழ தேசம் என்பது வெளிப்படை. சரி குறைந்த பட்சம் வடக்கு, கிழக்கு தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பதையாவது அனைவரும் ஏற்றுக்கொள்வர். இதனையும் மறுதலிக்கவே சிங்கள தேசம் தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து ஆக்கிரமிப்பு நிர்வாகத்தை நிலைநிறுத்த முயன்று நிற்கின்றது.

யாழ் நகரை ஆக்கிரமித்த பின் சந்திரிகா அரசு மேற் கொண்ட பிரச்சாரங்கள் எவை? யாழ்.குடாநாடு வழமைக்கு திரும்பிவிட்டது! மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்கின்றார்கள்!

யாழ்.குடாநாட்டு ஆட்சி மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்படும்! மக்கள் பிரதிநிதிகள் தெரிவுக்கு தேர்தல் வருகிறது! இவ்வாறு வெளியுலகிற்கு பரப்புரை செய்தபடி, தனது இராணுவ நிர்வாகத்தை வலுப்படுத்தியது.

தேர்தல் வைத்தாலும் ஆட்சி முறை உரிமை இராணுவத்திடமே இருந்தது. மக்கள் முழுமையான இராணுவ ஆட்சிக்கு உட்பட்டு தமது அடிப்படை உரிமைகளை முழுமையாக இழந்தனர். சுதந்திர நடமாட்டம், ஒன்று கூடும் உரிமை, சுதந்திர வழிபாட்டுரிமை என பல்வேறு அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் யாழ். மக்கள் வாழ்வு நிலை இயல்பு நிலை என உலகை ஏமாற்ற முனைந்தது சந்திரிகா அரசு.

**எழுச்சி பெற்றுவிட்ட மக்கள் புரட்சி எம்மக்களின் தேசவிடுதலையின் வால்நட்சத்திரம் என்றால் மிகையாகாது. எழுச்சி பெற்றுவிட்ட தேச மக்களிற்கு இத் தருணத்தில் உறுதியுடன் துணை நிற்பது புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகும்.**

ஏனைய சுதந்திர போராட்ட வரலாறுகள் கடைப்பிடித்த ஒத்துழையாமை மூலம் ஆக்கிரமிப்பு ஆட்சியை நிராகரித்தல் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க குடாநாட்டு மக்கள் முயன்றுள்ளமையை நடந்த நிகழ்வுகள் துல்லியமாகக் காட்டுகின்றன. வாரத்தில் இரு தினங்கள் ஆக்கிரமிப்பு ஆட்சியை முழுமையாக புறக்கணிக்கும் அவர்களது நிலைப்பாடானது சந்திரிகாவின் போலி பரப்புரையை தகர்த்துள்ளது. தமது பூரண கட்டுப்பாட்டில் என கூறும் யாழ்.குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் மிரட்டலால்தான் மக்கள் தமது ஆட்சியைப் புறக்கணிக்கின்றார்கள் என்றால், பூரண கட்டுப்பாடு என்று தாம் தொடர்ந்தும் உரிமை கோரமுடியாது. மறுபுறத்தே மக்கள் தாமாகவே புறக்கணிக்கின்றார்கள் என்றாகி விட்டால் அது அரசிற்கு பாரிய அரசியல் சிக்கலைத் தோற்றுவித்துவிடும்.

இந்நிலையில் திரிசங்கு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது சந்திரிகா அரசு. மக்கள் மீது பல்வேறு அழுத்தங்களையும் பிரயோகித்து மக்கள் உறுதியைக் குலைக்க சந்திரிகா அரசு முயலும். இதற்கு தனது தமிழ் அடிவருடிக் கூலிக் குழுக்களின் உதவியையும் முழுமையாக நாடும். எனினும் உறுதி கொண்ட மக்கள் முன் எந்தவொரு ஆக்கிரமிப்பு ஆட்சியும் அங்கீகரிக்கப்பட்டதாக அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக வரலாறு கிடையாது என்ற கசப்பான உண்மையை சந்திரிகா அம்மையாரும் முழுமையாக உணரும் காலம் தொலைவில் இல்லை. எழுச்சி பெற்றுவிட்ட மக்கள் புரட்சி எம் மக்களின் தேச விடுதலையின் வால் நட்சத்திரம் என்றால் மிகையாகாது. எழுச்சி பெற்றுவிட்ட தேச மக்களிற்கு இத் தருணத்தில் உறுதியுடன் துணை நிற்பது புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜனநாயக நெறிமுறைக்கு கிடைத்த வெற்றி

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டிற்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.






**ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 தமிழர்களுள் 19 பேருக்கு மே.11-ம் திகதி விடுதலை என்ற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது. மூவருக்கு ஆயுள்தண்டனையும் நால்வருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.**

சென்னை பூந்தமல்லி தனி நீதிமன்றத்தால் 26 தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. பல தமிழ் அமைப்புக்கள் திரு பழ.நெடுமாறன் தலைமையில் ஒன்றிணைந்து மேற்கொண்ட முயற்சியில் தற்போது 19 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்ற விசாரணை முடிந்து மே 11-ம் திகதியன்று மூவரடங்கிய நீதிபதிகள் குழு தனது தீர்ப்பை வழங்கியது. இத் தீர்ப்பில் 26 பேரில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



19 பேர் மீதான "தடா" பிரிவுகள் பொருந்தாது என்றுநிராகரித்த நீதிபதிகள் 19 பேரையும் விடுதலை செய்தும் ராபட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய மூவருக்கும் ஆயுள்தண்டனை விதித்தும் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு மரணதண்டனை விதித்தும் தீர்ப்பளித்துள்ளனர்.

இத் தீர்ப்பையடுத்து திரு.பழ.நெடுமாறன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "19 பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பது வழக்கிற்கான வெற்றியாக கருதப்பட்டாலும் எஞ்சியுள்ள நான்கு உயிர்களையும் காப்பாற்றுவதே அடுத்த கட்டப்போராட்டம். முன்பைவிட மிக வேகமாகவும் பெரும் எழுச்சியுடனும் உயிர்க்காப்பு நிதிக்குழு தன்னுடைய பணியைத் தொடங்கும். நால்வருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையையும் மூவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனையையும் எதிர்த்து மறுசீராய்வு மனுவினை உச்ச நீதிமன்றத்தில் அளிப்பதறாகான ஏற்பாடுகளை மூத்த வழக்கறிஞர் என். நடராசன் மேற்கொண்டுள்ளார். இத் தீர்ப்பு மக்களிடையே பெரும் எழுச்சியையும் அதிகாரிகள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இனி நினைத்த நேரத்தில் தங்கள் விருப்பத்திற்கு எவரையும் எதிலும் சிக்க வைத்து தண்டிக்கலாம் என்ற அதிகாரப் போக்கிற்கு பலத்த அடி விழுந்துள்ளது. இது ஜனநாயக நெறிமுறைகளுக்கு கிடைத்துள்ள வெற்றியாகும்." ■

# இறப்பற்றோர்

வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன.
முறிக்க முறிக்க
முளைவிடும்
மூர்க்கமான செடியைப் போல்,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கணுக்களைப் பிரசவிக்கின்றன.
சிதைக்கப்பட்டவைகள்
சிவப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்
முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன....

சூடுபட்ட
சுவாசப் பைகள்
ஆக்கிரமிப்பாளனை
அவிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாக
வெளியேற்றுகின்றன.

இறந்துபோனாள்
என எதிரியவன்
எக்காளமிடுகையில்,
பிணங்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே...
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்;
அதனாலென்ன!
துண்டிக்கத் துண்டிக்கத்
துளிர்ப்பார்கள் வீரர்கள்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள் ஓடும் வரை,
எங்கள் வீரர்க்கு
இறப்பே இல்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புகளுக்கு
அடிபணிந்து போகாது!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலகப் பந்தில்

# எங்கள் மாவீரர்கள்

## உயிர்க் காற்றில் ஆடும்



## அறிவுச்சோலை!

வெற்றித்திருமாறன்

உலகத்தில் போற்றுதற்குரிய பெருமக்களின் வாழ்வைக் கற்கைக்கு உட்படுத்துவோரில் பலர் அவர்களெங்கே? நாங்களெங்கேயென்று எண்ணிச் சோர்ந்து போய் விடுவதுண்டு. ஆனால் அவர்கள் அனைவரும் மனிதர்களே! என்பதையும்; மனித சக்திக்குள் நின்று கொண்டே உச்சங்களைத் தொட்டிருக்கிறார்கள் என்பதையும் புரிந்து கொண்டோர் நம்மாலும் முடியுமென எண்ணுகிறார்கள். அத்தகையோரே சாதனைகளும் படைக்கிறார்கள். அவர்களின் முன்தான் சந்தர்ப்பமும் கைகட்டிச் சாமரம் வீசுகிறது. நினைக்கவும், திகைக்கவும், அறிவுப்புலன் உண்மைதானா? என்று நம்ப மறுக்கவும் கூடியதான புதுமைகள் பல நடந்துகொண்டிருக்கும் தமிழீழ மண்ணிலிருந்து ஓர் அறிவியற் புதுமையாக மலர்ந்த வாழ்வே கரும்புலி மேஜர் காந்தரூபன். கடற்படைக் கலத்தை உடைத்த இக் கரும்புலியின் மனதில் உதயமான எண்ணங்களை உடைத்துப் பார்ப்பதும்; அதை எழுச்சிபெற்ற உலக மாந்தரோடும், அறிவியலோடும் இணைத்து ஒப்புமை காண்பதுமே இக் கட்டுரையின் நோக்கம்

சிலப்பதிகாரம், குறுந்தொகை போன்ற பண்டைய இலக்கியங்களில் வரும் நிகழ்வுகளை நாடகக் காட்சிகளென வர்ணிப்பார்கள். இவை போன்று பாடுபொருளாக்—கினால் காந்தரூபன் வாழ்விலும் நாடகக் காட்சிகள் போல எண்ணற்ற சம்பவங்கள் இயற்கையாக அமைவு பெற்றுள்ளதை அவதானிக்கலாம் ஒன்றிரண்டாக அலைகள் உருண்டு வரும் தமிழீழத்தின் ஓர் கடற்கரைப்பகுதி. சிறுவன் ஒருவன் அங்கு தன்னந்தனியனாக நின்றுகொண்டிருக்கிறான். நீ யார்? என்று அவன் முன் வைக்கப்பட்ட கேள்விக்கு "எனக்கு ஒருத்தருமில்லை. அம்மா, அப்பா எல்லாம் செத்துப் போச்சினம். சொந்தக்காரர் ஆருமில்லை, இப்படியே நடந்து நடந்து இந்தக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தன்" என்று பதில் கூறுகிறான். யாரும் இலல்லாத அந்தச் சிறுவனைக் கண்ட அந்த மனிதருக்கும் பிள்ளைகள் இல்லை என்பதே இங்கு நாம் காணும் முதல் காட்சிப் பொருத்தமாகும். யாருமற்ற அவனை அவரே பாசத்தோடு எடுத்தும் வளர்க்கிறார். இது ஒருநாள் நிகழ்ச்சி; உறவுக்கானது. இதேபோல இன்னொரு நாள் வருகிறது. அப்போது அந்தச் சிறுவன் காந்தரூபனாகியிருந்தான். அதே கடற்கரை, அதே இடம், பாத்திரங்கள் இரண்டும்கூட அதேதான்; ஆனால் காட்சி மட்டும் மாறியிருக்கிறது. இது பிரிவிற்கானது. எந்தக் கடற்கரையில் எந்த இடத்தில் உங்களுக்குப் பிள்ளையாகக் கிடைத்தேனோ அந்த இடத்திலேயே நான் உங்களிடமிருந்து விடைபெறுகிறேனெனக் கூறி அவன் விடைபெற்றுச் சென்று மாவீரனாகிறான்.

இந்த இரு காட்சிகளையும் ஆழ்ந்து பார்ப்போர் பண்டைய இலக்கியக் காட்சிகளின் உணர்வுகளை மீறி இக் காட்சியானது பொருத்தமான மிகை, குறையில்லா எழுச்சி பெற்றிருப்பதைக் காண்பர். அக்காட்சிகளின் இயல்பு நிலைகளின் பின்னணியில் முகிழ்த்த மகத்துவமே காந்தரூபன் அறிவுச்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோலையாகும். தாய்நாடு மீட்கப்பட வேண்டும், உயிர் கொடுத்தாயினும் சுதந்திரம் பெறப்பட வேண்டும். அதற்கு அடிப்படையாகவும் அந்த மேன்மைக்கு வலுவூட்டுவதாகவும் அறிவு அமைய வேண்டுமென்ற சிந்தனை அந்தப் போராளியின் உள்ளத்தின் அடிப்படை எண்ணமாகும். அந்த அடிப்படையின் தூண்டுதலால் வெளிப்பட்டதே அறிவுச் சோலைக்கான அவரது வேண்டுதலாகும். இத்தருணத்தில் ஓர் இனத்தை அழிவிலிருந்து காப்பது எது? என்ற கேள்விக்கு பண்டைத்தமிழ் அரசியல் அறிஞர்கள் கூறிய கருத்துக்களை சீர்தூக்கினால் காந்தரூபனின் எண்ணத்தின் மேன்மையை இன்னும் ஒருபடி மேலாக விளங்கிக்கொள்ள முடியும். "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்பது திருக்குறள் வலியுறுத்தும் கருத்து. இக்குறளில் அழிவிலிருந்து நம்மைப் பாதுகாக்க பயன்படுத்த வேண்டிய ஆயுதமாக அறிவையே தேர்ந்தெடுக்கிறார் வள்ளுவர்.

அக்கருத்தை உள்வாங்கிக் கொண்டவர் போலவே காந்தரூபனும் தேசியத்தலைவரைச் சந்தித்து, தன்னைப் போல எத்தனையோ இளைஞர்கள் இந்த நாட்டில் அநாதைகளாக வாழ்கிறார்கள் என்றும்; அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லாது வளரவும், படிக்கவும் வசதி செய்து கொடுங்கள் என்றும் வேண்டுகிறார். இந்த வரிகள் குறள் வரிகளைவிட இறுக்கமானவை. புதுமையும், உணர்ச்சியும் கொண்டவை. தேசியத் தலைவரின் மனதை சட்டெனத் தொட்ட வரலாற்று வரிகளும்கூட.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே. என்பது ஆரியப் படை கடந்த நெடுஞ்செழிய பாண்டியனின் கருத்து. இது புறநானூற்றின் 183–வது பாடலாகவுள்ளது. ஒரு குடும்பத்தில் பிறந்த பல பிள்ளைகளில் மூத்தவனுக்கு முன்னுரிமை என்ற கொள்கையை நிராகரித்து அவருள் அறிவுடையவனுக்கே முதன்மை என்று இதே பாடல் தொடர்ந்தும் வலியுறுத்துகிறது. மேலும் உலகத்தில் பெரிய தீமை எதுவென்றால் "மக்களைக் கல்லாது வளர விடல்தான்" என்பதை நீதி நூலான நான்மணிக்கடிகையிலும் காணலாம். அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற உலக ஆசிரியர் மாநாட்டில் முன் வைக்கப்பட்ட தீர்மானத்தில் அடுத்த நூற்றாண்டில் எல்லோருக்கும் சாகும் வரை கல்வி என்ற இலக்கை உலகம் எட்டித்தொட வேண்டுமென வலியுறுத்தப்பட்ட வேண்டுகோளை மேற்கண்ட நீதி நூற் கருத்துக்களுடன் பொருத்திப் பார்க்கவேண்டியது முக்கியமாகும்.

உலகத்தின் கல்விக் கூடங்களெல்லாம் பாடசாலைகள் என்றும், கல்லூரிகள் என்றும் தம்மை அடையாளம் செய்துகொள்ள அறிவுச் சோலை என்ற பெயர் தெரிவானதோ அவற்றிலிருந்து வேறுபட்டு, ஏன் வித்தியாசமாக நிற்க வேண்டும்? காந்தரூபனின் எண்ணத்தின் அடர்த்தியை வடிவப்படுத்த இதைவிட வேறு வழி காண்பதும் கடினமானது தான். உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் எடுக்க எடுக்க குறையும்; அறிவு ஒன்று மட்டுமே எடுக்க எடுக்க பெருகிச் செல்வது. அறிவிற்கு முற்றுப்புள்ளி கிடையாது; அது தொடர்ந்து வளர்ந்து செல்லும். உலகில் ஒருவன் பெறக்கூடிய மிக உயர்ந்த சிறப்பு எதுவென்றால் அறிவின் சிறப்பை அறிந்த மக்கட்பேறை அடைவதுதான் என்று அழுத்திக் கூறுவார் வள்ளுவர். ஒரு இனம் பெற்றுள்ள அறிவின் அளவு, ஆழம், இயல்பு, நுண்மை ஆகியவையே அந்த இனத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். விடுதலையை விரும்பும் இனத்திற்கு இத்தகைய சிறப்பு மிகமிக அவசியம். அதை நுட்பமாகப் புரிந்து கொண்டமையே காந்தரூபனின் வாழ்வியல் அனுபவமாகும். மேலும் எல்லா அறிஞர்களுமே அறிவின் அவசியத்தை வலியுறுத்திய போதும்; அவர்களுக்கு எல்லாம் வாய்க்காத சிறப்பு காந்தரூபனின் வாழ்வில் அழகாக நிறைவு பெற்றிருக்கிறது. உயிர் கொடுக்கும் இறுதி நேரத்தில் உயில் வேட்கையாக (இறுதி ஆசையாக) அறிவின் அவசியத்தை வலியுறுத்திய மாவீரன் என்ற சிறப்பு மகுடம் அவர் வாழ்வை அலங்கரித்து நிற்கிறது.

இனி இப்படியான எண்ணமுடைய மனிதர்களை தமிழர்கள் அல்







லாத உலக மக்கள் எவ்வாறு போற்றுகின்றனர் என்பதையும் இத்தருணத்தில் அறிதல் வேண்டும். ஆசியாக் கண்டத்தில் முக்கியமானதோர் நாடு கொரியா. ஒரு காலத்தில் அந்நாட்டின் அறிவுச் சோலையாக விளங்கி கொரியத் தேசியத்தை உருவாக்கிய மன்னர் செஜோங்கின் கதை இவ்விடத்தில் நம் கவனத்தைத் தொடுவதாயுள்ளது. கொரிய மக்களை 15–ம் நூற்றாண்டுவரை சீன மொழியும், சீனக் கலாச்சாரமும் தான் ஆட்சி செய்து கொண்டிருந்தன. மன்னர் செஜோங் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. பேச்சு வழக்கில் இருந்த கொரிய மொழிக்கு ஓர் புதிய வரி வடிவத்தை ஏற்படுத்தினார். அதற்கு 'ஹேங்கல்' என்றும் பெயர் சூட்டினார். கொரிய இனத்தின் அறிவியல் வெற்றிக்கு தாய்மொழிக் கல்வியே அவசியம் என்பதை உணர்ந்து கொண்டார். இவரின் கருத்தை சீன மொழிகற்று அதன் மூலமாகப் பாண்டித்தியம் பெற்ற எவருமே ஆதரிக்கவில்லை. தாய்மொழி மூலம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது.**

கற்பிக்கும் பாடசாலைகளை கொரிய நாடு முழுவதும் ஏற்படுத்தினார். அதனால் கொரிய மக்கள் நாளடைவில் பெரு விழிப்புப் பெற்றார்கள். சீனமொழி, பண்பாட்டு ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்துபோக, கொரிய மொழி உலக அரங்கில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. இன்று கொரியா பெற்றுள்ள தொழில் வளர்ச்சிக்கும், விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் காரணமானவர் இவரே என்பதை கொரிய மக்கள் இன்றும் கூட மறந்துவிடவில்லை. ஒருகோடி மக்கள் தொகை கொண்டதும், உலகின் ஒன்பதாவது பெரிய நகரமாகத் திகழ்வதும், தென்கொரியாவின் தலைநகராக விளங்குவதுமான சியோல் நகரின் மத்தியிலே கொரிய நாட்டின் அறிவுச் சோலையாக விளங்கிய மன்னர் செயோங்கின் பளிங்குச் சிலை இன்றுகூட பெரு மதிப்புடன் போற்றப்பட்டு வருகிறது. காந்தரூபன் அறிவுச் சோலையையும் இப்படியோர் பின்புலத்தில் காண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மேலும் இவ்வாறான வரிசைக்கிரமத்தில் காந்தரூபன் வாழ்வின் மேன்மையைக் காணபதானது, தமிழ்த் தேசியத்தின் இன்றைய புது வலுவையும், வீறையும் அறிந்து கொள்ள அவசியமாகும். மேலும் காநதரூபன் போன்றதோர் மாவீரனின் சிறப்பை வள்ளுவர் எப்படியாக விளக்க முற்படுகிறார் என்பதை இறுதியாக அவர் கூறும் வரிகளிலேயே நாம் அறிந்து கொள்வதும் அவசியம்.

“அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தம்நோய் போல் போற்றாக்கடை”
(குறள்: 315)



பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக உணர்ந்து, அத் துன்பத்தைக்களைய முற்படாத அறிவால் ஆகக்கூடிய பயனொன்றும் இல்லை என்பது இதன் பொருளாகும். இனி விடுதலைப்புலிகள் என்ன சொல்கிறார்கள்? காந்தரூபன் என்ன சொன்னார் என்பதையெல்லாம் மன உலையில் போட்டு, வைரத் துண்டுகளாகப் பட்டை தீட்டிப் பார்த்தால் வள்ளுவர் தேடிய அறிவும், காந்தரூபன் வேண்டிய நின்ற அறிவும், அதற்கு தேசியத்தலைவர் அறிவுச் சோலையெனக் கொடுத்த வடிவம் ஒன்றோடு ஒன்று பொருந்தி நிற்கும் அழகை இயல்பாகவே அறியலாம். ▣



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# களத்திலிருந்து ஒரு கடிதம்

தேவிபுரம்
முல்லைத்தீவு
10.03.99

அன்பின் ரமேஸ்,

சில வருடங்களின் பின் இக் கடிதத்தை எழுதுகிறேன். அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வினால் உனது முகவரியை தொலைத்துவிட்டேன். (நானும் எனது முகவரியை தொலைத்துவிட்டு தேடுகிறேன்.) நீண்ட நாட்களின் பின் கண்ணன் மூலம் உனது முகவரியைப் பெற்றுக்கொண்டேன்.

நான் இப்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் என்கின்ற ஒரு சிறிய கிராமத்தில் ஒரு சிறிய குடிசையில் தற்காலிகமாக வாழ்கின்றேன். பல இடங்களில் இருந்து ஷெல்லடியாலும் விமானக்குண்டுவீச்சாலும் இராணுவ ஆக்கிரமிப்பாலும் கலைக்கப்பட்டு இங்கு வந்து குடியிருக்கின்றோம். இங்கும் நிம்மதியாக இருக்கமுடியாத நிலை. குண்டு வீச்சு விமானங்களைக் கண்டு கண்டு ஓடி ஓடி பங்கருக்குள் வாழ்கின்ற வாழ்க்கைதான் நிரந்தரமாகிவிட்டது. ஒவ்வொரு நிமிடமும் பயத்துடன் வாழவேண்டிய நிலையில்தான் இருக்கின்றோம்.

நேற்றுக் கூட ஒருபகுதி மக்கள் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் இருக்கும் திசைகளை நோக்கியும் இராணுவங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடத்தில்கூட எத்தனை நாட்களுக்குத்தான் வாழப் போகின்றோமோ தெரியவில்லை. “நிரந்தரம் இல்லாத ஒரு வாழ்க்கையை நிரந்தரமாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்”

அது இருக்க என்னுடன் பழகியவர்களில் அநேகம் பேர் என்னுடன் இப்போது இல்லை. கடைசியாக என்னுடன் இருந்த சாந்தனும் வெளிநாடு என்று புறப்பட்டுவிட்டான். ஏதோ நான் மட்டும் இப்போ இங்கு இருக்கிறேன். பழைய நினைவுகள், செயல்கள் எல்லாம் மறக்கமுடியாமல் இருக்கின்றது.

இங்கு இப்போது தொலைபேசி கருவி வைத்திருக்கின்றார்கள். உலகில் எந்த நாட்டுடனும் தொடர்பு கொள்ளலாம். செலவுதான் அதிகம்.

தற்போது எனக்கு நிரந்தர விலாசம் இல்லை. இந்த விலாசத்தில் எத்தனை நாட்கள் இருக்கமுடியுமோ தெரியாது. சிறீலங்கா அரசு பெரியளவில் இராணுவங்களை குவித்து வருகிறது. இதைவிடப் பெரியளவில் அங்குள்ள தமிழர்கள் எமது போராட்டத்திற்கு பணம் தருவார்கள் என்பது இங்குள்ள ஒவ்வொருவரினதும் மனதிலுள்ள நம்பிக்கையாகும். உணவு இல்லாமலும், தேவையான மருந்துகள் இல்லாததனாலும் அடிக்கடி மரணங்கள் ஏற்படுகின்றன. குழந்தைகளைக்கூட காப்பாற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நாம் இருக்கிறோம்.

இங்கு நடப்பவையெல்லாம், எமது கஸ்ரங்களெல்லாம் உங்கள் இடங்களிலுள்ளவர்களுக்கு தெரியும் என நினைக்கிறேன்.

அங்கு அடிக்கடி பேரணிகளும் மாநாடுகளும் நடப்பதாக அறிகிறேன். எமது நாட்டைவிட்டு எமது மக்கள் புலம்பெயர்ந்துவிட்டாலும் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் எமது போராட்டத்திற்கு பக்கபலமாக தொடர்ந்தும் இருப்பது எமக்கு மன ஆறுதலைத் தருகின்றது.

அங்கிருந்து உனது கடிதத்தை எதிர்பார்க்கிறேன். மேலே உள்ள முகவரிக்கு கடிதம் போடவும். நான் இடம்பெயர்ந்தாலும் கடிதத்தை பெறக்கூடியதாக இருக்கும்.

அன்புடன்
பா. சின்னவன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மறைந்த நாட்டுப் பற்றாளர்




நாட்டுப்பற்றாளர் தோமஸ் ஹண்ட் யோக ரத்தினம் அவர்கள் 11.05.99 அன்று சுக வீனம் காரணமாக மலேசியாவில் காலமானார்.

தமிழீழ மக்களுக்கு எதிராக திட்டமிட்டு சிங்கள வர்களால் நடாத்தப்பட்ட படுகொலைகளை உலகம் கண்டுகொண்ட ஜூலை 83 இனக்கலவரத்தின் பின் தமிழீழ மக்களின் பாதுகாப்பிற்கு தமிழீழம் ஒன்றே தீர்வு என்ற தீர்க்கமான முடிவு டன் தமிழீழ விடுதலைக்காக கடந்த 16 ஆண்டுகளாக தனது வாழ்வை அர்ப்பணித் தார்.



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங் களை உலக நாடுகளுக்கு தன்னுடைய எழுத்து மூல மாக எடுத்துரைத்து வந்த அவர் Why Tamil Eelam, Readings Tamil History ஆகிய இரண்டு ஆங்கில நூல்களை எழுதி வெளியிட்டார்.

அத்துடன் மலேசியாவில் செயற்பட்டுவரும் தமிழீழ ஆதரவாளர்களுக்கு ஓர் ஆலோசகராகவும், வழிகாட்டி யாகவும் இருந்தார்.

தமிழீழ விடுதலைக்காக அன்னார் ஆற்றிய சேவை யை மதித்து 1997–ம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் "நாட்டுப்பற்றாளர்" என கௌரவிக்கப்பட்டார்.

1923–ம் ஆண்டு மலேசிய மண்ணில் பிறந்த இவர் தமிழீழம் சென்று தனது ஆரம்பக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்றார். பின்பு மலேசியா திரும்பி மலாயா பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்ற இவர் அதனைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகவும் பணியாற்றினார். 1957–ம் ஆண்டு மலேசிய வெளிவிவகார அமைச்சில் பணியாற்றவென இணைந்துகொண்டார். இவர் பல நாடுகளிலுமுள்ள மலேசியத் தூதரகத்தில் பணியாற்றி யிருந்தார். அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் அதிகாரியாகவும் சென்னையில் மலேசியத் தூதரக முதல்தர அதிகாரியாகவும் நைஜீரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் துணைத் தூதுவராகவும் பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது.

## ஈகம் நிறைந்த ஈழப் பெரியார்

இரா. திருமாவளவன்

யோக ரத்தினம் ஒண்டமிழ் நெஞ்சர்
ஈகம் நிறைந்த ஈழப்பெரியார்
இன நலம் மேம்பட இமையா துழைத்தவர்
மன நலம் பெற்ற பண்பார் செல்வர்
மலையக மண்ணின் தூதராய் சென்று
அலைகடல் கடந்து அரும்பணி யாற்றி
உயர்நிலை பொறுப்புக்கள் உயர்நிலை தொடர்வுகள்
பெயர்புகழ் எல்லாம் பெற்றிருந் தாலும்
எண்பத்து மூன்றில் எண்ணி லடங்கா
என் தமிழ் மக்கள் அழிக்கப் படுகையில்
கொதித்து எழுந்தவர் உள்ளம் துடித்தவர்
மதிப்பும் பணமும் பெற்று என்பயன்
தமிழருக்குதவிட மனமில்லை என்றால்
அமிழ்தத் தமிழை அரியணை ஏற்றும்
தனிப்பெரும் தலைவனின் தன்நலம் கருதா
துணிந்த பணிக்கு முன்னின் றுழைத்தார்
முதிர்ந்த வயதிலும் மூலை முடுக்கெலாம்
பதிந்த செய்தியைப் பரப்பி வந்தவர்
கெடுபிடி நிறைந்த இந்த நாட்டிலும்
எடுத்த நோக்கினை வெல்ல செய்தவர்
தமிழனுக் கென்றொரு சரித்திரம் வேண்டும்
திமிர்பிடித் தலைந்து திரிந்தவ ரெல்லாம்
வாயை மூடி அடங்கிட வேண்டும்
வாய்மை வெளிப்பட சூழ்வுகள் அகல
குறிப்புகள் திரட்டி நூல்கள் எழுதினார்
செறிந்த கொள்கை நெறிப்படி வாழ்ந்த
அப்பெரு மகனைத் தலைவர் உணர்ந்தார்
இப்பெரு நிலத்தில் நாட்டுப்பற் றாளர்
எனும் பெரு விருதினை வழங்கி ஊக்கினார்
என்றும் இன நலம் பெரிதென் றெண்ணிய
பெரியவர் தன்னலம் மறந்தார்! நலிந்தார்
அரிய பணிகள் செய்து கொள்கை
நிலைபெற புகழுடம் பெய்தி
மலேயகம் சிறக்க பெருமைபெற் றாரே!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிஜங்கள்

த.நிரஞ்சலன்

கறுப்பனையும், சிவப்பனையும்
கலப்பையில் பூட்டி
வயலில் ஓட்டி நெல் விதைத்து
நாற்றறுத்து வாழ்ந்த - அந்த
நேற்றிருந்த காலங்கள்
நிலைக்காமல் எம்மைவிட்டு
நெடுதூரம் போய்விட்டதுவும் நிஜமே!
சின்னஞ் சிறு சிட்டுக்களாய்
சிறகசைத்து பள்ளி சென்ற
பாதைகளில்
தும்பிப் பூச்சிகளை தூர இருந்து
பிடித்து
கும்மி அடித்து நானும் என் அத்தை
பெண்ணும்
நூலில் கட்டிப் பறக்கவிட்டுப் பார்த்த
அந்த
இனிய நாட்கள் எம்மை விட்டு
இறந்து, நெடுதூரம் போய்விட்டதுவும்
நிஜமே!
உலகம் புரிந்து கொண்ட பின்னும்
மழலைகள் எம்மை நினைத்து
நண்பர்களாய் சேர்ந்து
பாடம் நடக்கும் போதே புளிய மரம்
ஏறி
பழம் பிடுங்கி அதிபரின் முன்வெட்கித்
தலைகுனிந்து
பிரம்படி பட்ட அந்த பிரியமான
காலங்கள் - எமை
பிரிந்து போய்விட்டதுவும் நிஜமே!
பிறந்த மண்ணில் கூட பிரியாமல்
உரிமையுடன் உறவுகளோடு
வாழாமல்
திக்குத் தெரியாத குருவிகளாய்
கூட்டை இழந்து தோளில் போட்ட
முட்டையோடு இடம் பெயர்ந்து
அகதிகள் என்ற புது நாமம் சூடி
அணுவணுவாய் எங்கள் உயிரிழந்து -
இந்த
பூமிக் கல்லறைக்குள் பூதவுடல்களாய்
நாம்
புதைந்து கொண்டிருப்பதுவும் நிஜமே!
புகலிடம் தந்து எம்மைக் காத்த
புதிய இடங்களில் கொட்டிவிட்டு
உறவுகளைக் கட்டிக்காக்க நினைத்தும்
மீண்டும் ஒரு இடப் பெயர்வால்
போகுமிடம் தெரியாது புழுக்களாய்
விழி பிதுங்கி எமக்கு வாழ்வே
வெறுத்துப் போய்விட்டதுவும் நிஜமே!
ஆனாலும்....
இன்னும் இந்த மானுடங்கள்
மரணித்துப் போகாமல் மனிதர்களாய்
'மானம்' என்ற ஒன்றிற்காக - தம்
மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பது
ஏனென்றால்!
எமை ஆள நினைக்கும்
எதிரிகளின் எலும்புகளை... எம்
வாழ்வுச் செடிக்காக - மண்ணில்
பசளையிடப்போகுமொரு பொற்காலம்
- எம்
பக்கத்திலேயே படர்ந்திருக்கும்
நியாயமான நிஜத்தினை
நிறைவேற்றுவதற்காய்.....



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழால் தழைத்த சிங்களம்

## வந்தேறிய ஆரியச் சிங்களரும் சிங்களமும்

## ஆரியப் பார்ப்பனரும் ஆரியச் சிங்களரும்

சிங்களவர்கள் இலங்கையின் தொல்பழங்குடிகள் அல்லர். இவர்கள் இந்தியாவில் வாழும் ஆரியப் பார்ப்பனர்களைப் போல மைய ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த நாடோடிகளே. அடிப்படையில் சிங்களவர்களின் மொழி ஓர் ஆரியக் குடும்ப மொழியே.

மைய ஆசியாவில் ஆரியப் பார்ப்பனர்கள் வேதமொழி பேசினர். இவர்கள் கி.மு 1500–ஆம் ஆண்டளவில் இந்தியாவினுள் புகுந்தனர். இந்தியா வந்தபோது வட இந்தியாவில் பேசப்பட்டுவந்த தமிழின் திரிமொழிகளான வட திராவிட மொழிகளைத் தம் வேதமொழியுடன் சேர்த்துப் புதுமொழி ஒன்றை உருவாக்கினர். இம் மொழியே சமஸ்கிருதம் என்பது.

சிங்கள ஆரியர்கள் இந்திய ஆரியர்களோடு சேர்ந்து வந்த கூட்டத்தினர் இல்லை. இவர்கள் இந்திய ஆரியப் பார்ப்பனர்கட்குப் பிறகு வந்த தனியொரு கூட்டத்தினராகவே தெரிகின்றனர். பண்டித சவகர்லால் நேரு மைய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் பல்வேறு கால கட்டங்களில் அலை அலையாக இந்தியா நோக்கி வந்தார்கள் எனத் தம் மகள் இந்திராவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஆரியர்கள் வடதிராவிடம் கலந்து உருவாக்கி வைத்திருந்த சமஸ்கிருதத்தைச் சிங்கள ஆரியர்கள் தழுவிக் கொண்டனர். பின்னர் பௌத்தம் சார்ந்தபோது பாலிமொழியையும் உள்வாங்கிக் கொண்டனர். பாலி மொழி ஓர் வடதிராவிட மொழியே. இந்திய ஆரியர்களை விட அதிகமாகத் தமிழை அப்படியே தழுவிக் கொண்டவர்கள் சிங்கள ஆரியர்களே.

இந்திய ஆரியர்களின் சமஸ்கிருத மொழியும் சிங்கள ஆரியர்களின் சிங்கள மொழியும் இவ்வாறாகத் தமிழுக்குக் கடன்பட்டன. அதைப் போலவே இவ்விரு ஆரியர்களும் இந்தியா வருமுன் பேசிவந்த ஆரிய மொழியும் தமிழுக்குக் கடன்பட்டே யிருக்கிறது.

### சிங்கள ஆரிய உறவு

மேலை ஐரோப்பிய ஆரியர்களும் கீழை இந்திய சிங்கள ஆரியர்களும் ஆரியர்களின் தாயகம் என்று சொல்லப்படுகின்ற மைய ஆசியாவில் ஒன்றாகத் தங்கியிருந்தவர்களே. இவ்விரு ஆரியர்களும் ஓரினத்தவர்களே என்பதை இவர்களின் மொழியுறவு கொண்டே அறிஞர்கள் முடிவு செய்கின்றனர்.

### 'எல்' என்பதோர் தமிழின் வேர்

தமிழின் வேர்ச்சொற்களில் 'எல்' என்பதும் ஒன்று. இவ்வேரில் தோன்றிய தமிழ்ச் சொற்கள் மேலை ஆரிய மொழிகளிலும் கீழை ஆரியச் சிங்களத்திலும் ஒன்றுபோல் திரிந்து வழங்குகின்றன. 'தமிழால் தழைத்த சிங்களம்' என்னும் பெருந்தலைப்பின் முதல்தொடர் இதையே ஆய்ந்துரைக்கிறது.

**'எல்' என்னும் வேரின் முதற் பொருள்**

'எல்' என்னும் வேருக்கு முதற் பொருள் உயர்வும் எழுச்சியும் ஆகும். இதற்குரிய வழிப்பொருள் ஒளியும் வெண்மையும் ஆகும்.

எக்கு —எக்குதல் என்ற தமிழ் வழக்குகள் நாம் அறிந்தனவே. மூச்சைப் பிடித்து வயிற்றை மேலே உயர்த்துதலே எக்குதல் எனப்படும். இச்சொல் எல்+கு – எக்கு என்பதாக 'எல்' என்னும் உயர்வுப் பொருள் மூலம் பிறந்தது. 'பொல்' என்னும் துளைப் பொருள் மூலத்திலிருந்து பொல்+கு–பொக்கு (உள்துளையுடையது); பொக்கம் (உள்ளே ஒன்றும் இல்லாத பொய்); பொக்கை (உள்ளீடு உடைந்த துளை வடிவம்) ஆகிய சொற்கள் தோன்றியதை எல்+கு– எக்கு என்பதற்கு ஒத்த எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

விரைந்து ஓடிவரும் ஆற்றுநீர் ஆங்காங்குக் குவித்த மணல்திட்டு எக்கல் – எக்கர் தமிழில் அழைக்கப்படும். இவ்விரு சொல்லும் எல்+கு – எக்கு – எக்கல் – எக்கர் என்பதாகப் பிறந்தனவே. இவற்றிற்கு உயர்வே மூலப்பொருள்.

'எல்' என்னும் வேரிலிருந்து தமிழில் தோன்றிய உயர்வுப் பொருட் சொற்கள் பல. மேலையாரிய மொழிகள் பலவற்றிலும் இவ்வுயர்வுப் பொருட்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொற்கள் புகுந்து நிலைபெற்றுள் ளன.

**'எல்' என்னும் சூரியன்**

ஞாயிறு, கதிரவன், சூரியன், பருதி, பரிதி ஆகியன தூய சொற் களே. இவைபோலவே 'எல்' என்ப தும் சூரியனைக் குறிக்கத் தமிழில் தோன்றிய பிறிதொரு சொல்லாகும். சூரியன் காலையில் கீழ்த்திசையில் கடலில் தோன்றிச் சிறிது சிறிதாக மேலே உயர்ந்து வருவது போன்ற தோற்றம் தருவதை ஒட்டியே அது 'எல்' எனப்பட்டது.

அகலிரு விசும்பின் பாயிருள் பருகிப்
பகல்கான்று எழுதரும் பல்கதிர்ப் பருதி (பெரும் 1–2)

என்னும் பெரும்பாணாற்றுத் தொடரில் சூரியனிடம் கண்ட உயர்வுத் தன்மை அழகாகச் சொல் லப்பட்டுள்ளது. சூரியன் 'எல்' எனப் பட்டதை

எல்லும் எல்லின்று (குறுந் 390,1)
எல்லையும் இரவும் (கலித் 142,61)
எல்விருந்தாகி (ஐங், 396,5)
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று (குறுந் 353,5)

போன்ற சங்க நூல் ஆட்சிகளில் காணலாம். எல்லின் சங்க ஆட்சிகள் இன்னும் பலவாகும். பிற்கால இலக் கியங்களிலும் 'எல்' சொல்லை மிகுதி யாகக் காணலாம்.

**'எல்'லும் ஒளியும்**

'எல்' என்ற சொல்லிற்கு ஒளி என்ற பொருள் பெருவழக்குடன் உள்ளது. 'எல்லே இலக்கம்' எனத் தொல்காப்பியர் கூறியதைப் பலரும் எடுத்துக்காட்டுவர்.

சூரியன் கடலில் தோன்றி உய்வ தாய்க் காட்சியளிப்பதன் வழி உயர் வுப் பொருளிலே முதலில் அது 'எல்' எனப்பட்டது. சூரியன் ஒளியுடைய தாய் இருப்பதன் வழி 'எல்' எனச் சூரியனைக் குறித்த சொல் ஒளிப் பொருளை மூலம் வழியாகவே எல்பு – என்பு: எல் – எலுபு – எலும்பு எனப் பிறந்தன.

அ.மேலை ஆரிய மொழிகளில் தமிழின் ஒளிப்பொருள் 'எல்'

தமிழின் ஒளிப்பொருள் 'எல்' மேலையாரிய மொழிகளில் நான்கு வடிவங்களில் திரிந்து வழங்குகின் றன. அவை

1. எல் – எல்லோ – எல்லி (ello, elle)
2. எல் – எல்பேஸ் (albus)
3. எல் – எலு – லூ – லூகா (leuca)
4. எல் – ஹெல் (Hell, Helios)

**1. எல் – எல்லோ – எல்லி (ello, elli)**

**Apollo**

கிரேக்கர்களின் உரோமானியர்க ளின் சூரியக்கடவுள் பெயர் 'Apollo' என்பது.

Apollonian - adj. 1 of relating to Apollo, the Greek and Roman sun god, patron of music and poetry - Skeat

Apollo என்ற சொல்லை ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் மாமேதை கீற்று apo + ello எனப் பிரிக்கின்றார். 'apo' என்ற முன் ஒட்டு உடைமைப் பொருளைக் குறிப்பது. "ஒளியுடையது" என்று தமிழில் சொல்லும் வழக்கினை மேலை மொழி 'உடையது ஒளி" என மாற் றிச் சொல்கிறது. சூரியனைக் குறித்த 'எல்' என்னும் ஒளிப்பொருட்சொல் இவ்வாறாக Apollo–வில் ஒளிந்து கொண்டுள்ளது.

**பேராசிரியர்**
**கு.அரசேந்திரன்**

**Ellebore**

சூரியனைக் கண்டு மலரும் பூ வகைகள் ஆங்கிலத்தில் 'elebore' எனப்படும். பிரெஞ்சு மொழியில் இச்சொல் ellebre, elebore எனவும் இலத்தீனில் eleborus, elleborus என வும் கிரேக்கத்தில் Welleboros எனவும் வழங்கப்படுகிறது. இவை தொடர்பான மேலை மொழியாட்சிகள் மிகப்பல.

சூரியனை வழிபட்ட பழங்குடிக் கிரேக்கர்களில் ஒரு குடியினர் 'elas' எனப்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**2. எல் – எல்பஸ் (albus)**

மொழிஞாயிறு பாவாணர் எலும்பு என்னும் தமிழ்ச் சொல்லின் வ ர லாறு எழுதியபோது தமிழின் 'எல்' மேலையாரியம் சென்று புழங்கும் வழக்குகளையும் சேர்த்துச் சொல்லி யுள்ளார்.

"எலும்பு – வெள்ளையான உறுப்பு

எல்பு – L.albus - White, LL.alba - White

E. alb, White vestment reaching to feet, Worn by priests,

E. albaha - White metal

L. albata - Whitened

E. album - book of White sheets for insertion of autograph, photo graphs. etc"

போலப் பல எடுத்துக்காட்டுக ளைப் பாவாணர் சொல்லுவார். பாவாணர் காட்டிய நெறியில் மேலும் பல ஆட்சிகளை மேலை மொழிகளில் காணமுடிகின்றது.

பிரிட்டனின் பழைய பெயர் 'albion' என்பது. இப்பெயர் பிரிட்ட னுக்கு வருவதற்கு அது வெண்பனி மூடிய தேசமாக இருப்பது காரண மாக இருக்கலாம் என்று ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் சி.டி. ஆனியன் குறிப்பார்.

albion - Britain or England (old English via Latin from celitic, Probably realated to latin albus 'White' with reference to the white cliffs of Dover)

3. எல் – எலு – லூ – லூகா (Leuca)

தமிழில் 'எலே' என்னும் விளிச் சொல் பேச்சு வழக்கில் 'லே' என்ப தாக எளிதில் திரியும். இதை ஒத்ததே எல் – எலு – லூ– லூகா என்னும் வெண்மை சுட்டும் சொல்லின் திரிபும்.

இலத்தீனில் வெண்ணிறப் பெண் தெய்வம் என்னும் 'Leucothee' பெயரால் அழைக்கப்படுகிறது.

Leucothea and Lecothee -(the white goddes) name of Ino daughter of cadmus after she had been turned into the sea diety

வெண்ணிறக் கேடயம் இலத்தீ னில் 'Leuco' என்று அழைக்கப்படு கிறது. வெண்ணிறக் கண்புருவமு டைய ' Diana' குரங்கும் இலத்தீனில் 'Leuco' எனப்படுவதும் இங்கு குறிப் பிடத்தக்கது.

ஆங்கிலத்தில் Leuco, Leucoma, Leucotomy, Leukaemia போலப் பல சொற்கள் வெண்ணிறப் பொருள்க ளைக் குறிக்கப் புழங்குகின்றன. இவை யாவும் தமிழின் எல் வழிப் பிறந்த னவே.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**4. எல் – ஹெல் (Hell, Helios)**

தமிழின் வெண்ணிற 'எல்' ஆரிய மொழிகளில் Hell எனத் திரிவது பெரிதாகக் குறிக்கப்பட வேண்டிய தாகும். பரவலாய் இன்று ஆங்கிலத் தில் புழங்கும் Hello' என்னும் விளிப் பெயர் 'எல்லா' என்ற பழந்தமிழின் விளிப்பெயர்த்திரிபே என்று பாவா ணர் விளக்கியுள்ளார். இது சரியா னதே என்பதை 'எல்' – ஹெல் எனத் திரியும் வழக்கினாலும் நாம் தெளிய லாம்.

சூரியனைக் கண்டு மலரும் செடி வகைகள் இலத்தீனில் elleborus என் றும் helleborous என்றும் குறிக்கப் படுகிறது. இது, 'எல்' என்ற வழக்கும் Hell என்ற வழக்கும் ஒன்றே என்ப தற்குப் போதுமான சான்றாகும். இலத்தீன் அகராதி அறிஞர்களே இரண்டும் ஒன்றென்றுள்ளனர்.

மொழிஞாயிறு பாவாணர் 'எல்' என்னும் சூரியனைக் குறித்த தமிழ்ச் சொல்லை Helios எனச் சூரியனைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லோடு ஒப்புநோக்குக என்ற அளவோடு நிறுத்தியுள்ளார்.

**இலத்தீனில் – Helicon**

இலத்தீனில் ஓர் மலை Helicon என்ற பெயரில் அழைக்கப்படுகின் றது. இப்பெயர் இம்மலைக்கு வருவ தற்குக் காரணம் சூரியனோடு இது கொண்டிருக்கும் தொடர்பே காரண மாகத் தெரிகின்றது.

Helicon (elicon) a hill in Boeotia sacred to Apollo and the Muses

என்பது இலத்தீன் கேசல்ஸ் அக ராதி தரும் விளக்கமாகும்.

செருமனில் 'Hell'

எல் என்னும் ஒளிப்பொருட்சொல் 'Hell' எனத் திரிந்து ஒளி, தெளிவு, விழிப்பு என்ற பொருள்களில் செரு மனில் நிலை பெற்றுள்ளது.

பிரெஞ்சில் Helio marin

சூரிய ஒளியும் கடற்காற்றும் நோயகற்றுவன. சூரிய ஒளிபெறவும் கடற்காற்று பெறவும் அமைக்கப் பட்ட கடற்பகுதியில் உள்ள மையங் கள் பிரெஞ்சு மொழியில் 'helio marin' என்று சொல்லப்படுகின்றது.

Heliomarin - center, center offering sea and sun therapy.

Helio marin என்னும் பெயரில் உள்ள வியப்பு என்னவென்றால் marin என்ற சொல்லும் 'வாரணம்' எனக் கடலைக் குறித்த தமிழ்ச் சொல்லின் திரிபே என்பதாகும். marinus என இலத்தீனிலும் Marina, Marine என ஆங்கிலத்திலும் வழங் கும் சொற்கள் 'வாரணம்' என்னும் கடலைக்குறிக்கும் தமிழ்ச் சொல்லி லிருந்து திரிந்ததைப் பாவாணர் விளக்கியுள்ளார். எனவே எல் + வாரணம் என்னும் இரண்டின் கூட்டே helio marin என்பதாகும்.

சூரியமரபினராகிய கிரேக்க இனம்

elas என்னும் சொல் கிரேக்கர்க ளைக் குறித்ததை ellebore என்ற சொல்பற்றிச் சொன்னபோதே சுட்டி னோம். elas என்ற சொல்லினால் மட்டுமல்லாமல் elaoo, eleen, ellenee என்ற வடிவில் ஒலிக்கும் வழக்கு களாலும் கிரேக்க இனம் குறிப்பிடப் பட்டதைக் கிரேக்க மொழி அகராதி களில் நாம் காண்கிறோம்.

பண்டைக் கிரேக்கத்தில் வாழ்ந்த பல்வேறு பழங்குடிகளில் Hellen என்போர் ஓர் தலைமைப் பிரிவினர். அவர்கள் சூரியனை வழிபட்டவர்க ளாக இருந்தபடியால் அப்பெயரைப் பெற்றிருக்கிறார்கள். Hellen என்றும் அப் பழங்குடியினர் பெயரே ஒட்டு மொத்த கிரேக்கப் பழங்குடியினர்க் கும் பெயராகிப் பின் கிரேக்க மக்க ளுக்கு உரியதாயிற்று. ■

# நான் ஏன் பிறந்தேன்

எல்லாம் வழமையானவை
முற்றும் முழுதும் வழமையானவை
அனைவரும் வழமையைப் போல
புகை படிந்த குப்பி
விளக்கின் முன் நான்
விரிந்த புத்தகம் என்முன்
எட்டவாகவே
கேட்டு வந்த சத்தம்
மிக மிக அருகாகவே! ஐயோ!
செவிப்பறை அதிர்ந்தது.
எழுந்த புழுதியடங்கியபோது
அப்பாவைப்போல் அம்மாவைப்போல்
தங்கையை, தம்பியை வீட்டைப்போல்
என் புத்தகமும் சிதறிக்கிடந்தது
குப்பி விளக்கும்கூட
நான் மட்டும் முழுசாய்,
குருதியும் புழுதியும் புகையுமாய்
என் வெள்ளைச் சீருடை
மரக்கிளையில் தொங்கியது.
உருமறைப்பு ஆடைபோல
நன்றே செய்தான்
அதனை எடுத்து
அணிந்து கொண்டு விட்டேன்.
நான் பிறந்து விட்டேன்
ஒரு மனிதனாக.

கை. சரவணன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரட்டி விரட்டி வந்து
உயிர்குடிக்கும் குண்டுகள்.
உயிர்காக்க ஓட்டம்.
பாதை தெரியாத ஓட்டம்.
பெரியமரம் ஒன்றின்
நிழல் தேடி ஓடும் இந்த
மனிதர்கள் உங்கள்
சொந்தங்கள்தான்.

இவர்கள் சோற்றுக்காக
சுதந்திரத்தை விற்றவர்களல்ல.
சுதந்திரத்திற்காக சோற்றை
இழந்தவர்கள்.
வீட்டுக்காக விடுதலையை
விட்டவர்களல்ல.
விடுதலைக்காக வீட்டை
விட்டு மரத்தடிக்கு வந்தவர்கள்.





எரியும் பசியடக்க
தந்தையும் தாயும்
உணவுதேடி சென்றுவிட
முள்ளுப் பற்றையே
மெத்தையாகி படுத்துறங்கும்
செல்வங்களே,
பசியெழுப்பும் எழும்பாதீர்கள்.
உணவு வரும்வரை
உறக்கம் கொள்ளுங்கள்.

கவிவரிகள் - ச.ச.முத்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகரமானவன்

தியாகி சிவகுமாரன் வீரச்சாவடைந்த ஜூன் 5–ம் திகதியை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக பிரகடனப்படுத்தியிருப்பதானது மாணவர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாவுள்ளது. மாணவர்களுக்கும் சிவகுமாரனுக்கும் உள்ள தொடர்பை அறிய 70–ம் ஆண்டு ஆரம்பத்தில் தமிழீழப் பாடசாலை மைதானங்களில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவு கூறுவதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். தரப்படுத்தலை எதிர்த்து தமிழீழ மாணவர்கள் போர்க்குரல் கொடுத்த காலம் அது. பாடசாலைவிட்டு அவசரஅவசரமாக மாணவர்கள் வீடுநோக்கி ஓடும்பொழுது சில உயர்வகுப்பு மாணவர்கள் வந்து ஒரு அண்ணன் உங்களிடம் பேச வந்துள்ளார் என்று கூறுவார்கள். அவர் என்ன கூறுகின்றார் எனப் பார்ப்பதற்கு பாடசாலைக்கு வெளியிலுள்ள மைதானத்தில் மாணவர்கள் கூடுவார்கள். யார் இவர் என்பதை அறிய முடியாத நேரம் அது. ஆனாலும் அவர் சொன்ன செய்திகள் புதிதாக இருந்தன.

சிங்கள அரசு தொடர்பாக பாடசாலைப் புத்தகங்கள் உருவாக்கி வைத்திருந்த கருத்தியலை வெட்டி வீழ்த்துவதாக இருந்தது அவரின் உரை. அக்கால இளைஞர்களில் மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்களில் முக்கியமான ஒருவர் சிவகுமாரன் என்பது சிலகாலத்தின் பின்னரே வெளியானது. அப்பொழுது தமிழீழமே அந்த வீரனுக்காக தலை குனிந்து அஞ்சலி செலுத்தியது. அவரின் இறுதிப் பிரிவை அன்றைய மாணவ உலகமே அஞ்சலித்தது மறக்கமுடியாத நிகழ்வாகும்.



## தியாகி சிவகுமாரன்

அன்றைய நாட்களை அப்படியே நினைவில் கொண்டு தியாகி சிவகுமாரன் வீரச்சாவடைந்த நாளை மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தினார் தமிழீழத் தேசியத் தலைவர்.

மாணவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் எனப் போராடிய தியாகி சிவகுமாரன், நெஞ்சில் உரத்தோடும், தாயகப் பற்றோடும், தமிழீழ உணர்வோடும் போராடிய வீர மறவன்.

சிவகுமாரன் என்ற இளைஞனின் அகரம் போன்ற ஆரம்பச் செயற்பாடுகள் பின்பு ஒவ்வொரு தமிழனின் தன்மான உணர்வுகளைத் தட்டியெழுப்பும் அறைகூவலாய் அமைந்து ஒரு மாபெரும் மறவர் படையினரின் மாவீரத்துக்குள்ளும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த கலவரங்களுக்கும் படுகொலைகளுக்கும் காரணமாக இருந்த பொலிஸ் உயர் அதிகாரி சந்திரசேகரை அவன் தேடி அலைகின்றான். தெல்லிப்பளை என்னும் இடத்தில் வைத்துக் குண்டு வீசுகின்றான். சந்திரசேகர் தப்பி விடுகிறான். மீண்டும் யாழ்ப்பாணத்தில் அவனது வீட்டிற்கு அருகில் வேலைக்குச் செல்லும் சமயம் ஜீப்பை வழி மறிக்கிறான், குண்டை வீசுகிறான். குண்டு வெடிக்கவில்லை. சுழல் துப்பாக்கி எடுத்து சந்திரசேகரின் மார்புக்கு நேராக வைத்து ஆறு ரவைகளையும் தீர்க்க முனைகிறான். ஆறும் வெடிக்க மறுக்கின்றன. மீண்டும் மறைவாகிறான்....

அவனது தலைக்கு வலை போட்டு பொலிஸார் தேடுகின்றனர். ஆயிரம் பேர் ஆயுதங்களுடன் ஊரை வளைத்துக்கொள்கின்றார்கள். அவன் யாழ்ப்பாணத்தில் உலாவிக்கொண்டிருக்கின்றான்.

பணம் தேவைப்படுகின்றது. யாரும் உதவிசெய்யவில்லை. நண்பர்கள் மூவரைக் கூட்டிக்கொண்டு ஓரிடத்துக்குப் போகிறான். அங்கும் பணம் கிடைக்கவில்லை. ஒருசிலர் அவனைத் துரத்துகின்றார்கள். அவர்களுக்கு அவன் சகலதையும் புரியவைக்க முயல்கிறான். நேரம் போய்க்கொண்டிருக்கின்றது. பொலிஸார் சுற்றி வளைத்துக்கொள்கிறார்கள். துப்பாக்கியில் ரவைகள் இல்லை. உடன் வந்த நண்பர்களை நாலா பக்கமாக ஓடச் சொல்லிவிட்டு அவனும் ஓடுகிறான். அறுவடை செய்யப்பட்ட புகையிலைத் தோட்டத்திலுள்ள புகையிலை மரங்களின் அடிக்கட்டை அவனின் காலில் குத்திவிடுகின்றது. வேகமாக ஓடமுடியவில்லை. பொலிசார் பிடித்துவிடுகின்றனர். அவனிடம் ஒரு குப்பியில் எப்போதும் சயனைட் இருக்கும். தொடையைக் கத்தியால் கிழித்து நஞ்சை இரத்தத்துடன் கலப்பதற்கு முயற்சிசெய்கின்றான். பொலிசார் கத்தியைப் பிடுங்கிவிடுகின்றனர். நஞ்சை வாயில் போட்டு விழுங்கிவிடுகின்றான்.

பொலிசார் அவனை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மருத்துவமனையில் சேர்த்து சங்கிலியால் கட்டிலுடன் பிணைத்துப் போடுகின்றனர். பயங்கர ஆயுதங்கள், பொலிஸ் காவல் வேறு. ஒரு சில மணிகளில் அவன் உயிர் பிரிந்துவிடுகின்றது, அந்த சிவகுமாரனின் உயிர் பிரிந்துவிடுகின்றது. சிவகுமாரன் பற்றிய மேல் கூறப்பட்ட செய்திகள் ஒரு வரலாற்றுப் பெருமைமிக்க வீரன் ஒருவனின் முகவரி பற்றிய முன்னுரைபோல் அமைந்துள்ளன. ஒரு போராளியின் ஒருநாள் குறிப்பு உணர்த்தும் செய்திகூட எவ்வளவு உன்னதமானது. உயர்வானது.

இந்த வீரனின் வாழ்வு உணர்த்தி நிற்கும் உண்மைகளை இன்றும் நாம் நிதர்சனமாகக் காண்கின்றோம். ஒரு சீர்திருத்தவாதியாய் சாதி ஒழிப்பு, சமய சீர்திருத்தம் போன்ற சமூக விடுதலை சார்ந்த விடயங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்த இந்த வீரன் தனது வாழ்வைத் தமிழ் மக்களுக்காக ஈகம் செய்துள்ளான்.

போராளி ஒருவனின் வாழ்வு என்பது உண்மையில் அவன் நேசித்த தாயகத்தின் வாழ்வாய், அந்நாட்டு மக்களின் வாழ்வை வாழ்வாங்கு வாழும் தன்மை கொண்டது. ஒரு விளக்கை நாம் ஏற்றி வைப்பதால் அந்த விளக்கின் உதவியினால் இருளை அகற்றி வெளிச்சத்தை உண்டாக்க முடியும். அதேவேளை நாம் ஏற்றிய அந்த ஒரு சுடரிலிருந்து மேலும் மேலும் பல்லாயிரம் சுடர்களை உருவாக்கமுடியும். இப்படியாக உருவாகும் சுடர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க வெளிச்ச ஒளியில் இருள் இருந்த இடம் தெரியாமல் போகும்.

இப்படியான ஒரு தியாகியின் நினைவுநாளை தமிழீழமே எழுச்சியுடன் கொண்டாடுகின்றது. இவ்வாண்டும் தமிழீழத்தில் பொதுக்கூட்டங்களும் பேரணிகளும் சிறப்பாக நடைபெற்றன. மட்டக்களப்பில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு அவர்கள் பேசும் போது "எமது சொந்த மண்ணில் ஏகாதிபத்திய சக்திகளின் ஆதிக்கத்திற்கு இடமளிக்கக்கூடாது என்பதிலும், பாடசாலை மாணவர்களின் விகிதாசார முறைக்கு எதிராகவும் போராடி இலட்சிய வேட்கையுடன் வாழ்ந்த சிவகுமாரனின் இலட்சியப் பாதையை மாணவர்கள் பின்பற்றவேண்டும்" என கேட்டுக்கொண்டார்.

இம் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளில்

★ தமிழ் மாணவர்கள் மரநிழலில் சிங்கள மாணவகள் மாடி மனையில்.

★ எங்கள் கையில் விலங்கு, சிங்கள மாணவர் கையில் பேனா.

★ அரசே! வன்னி மாணவர்களின் கல்வியை ஷெல் வீசி குழப்பாதே.

★ சிங்கள மாணவர்களின் கல்வி மின்சாரத்தில் எங்கள் கல்வி குப்பி விளக்கிலா?

★ தமிழ் மாணவர்களின் உரிமையை சாகடிக்காதே.

தமிழர் வரலாற்றைக் கிழிக்காதே, சிங்களவர் வரலாற்றைத்திணிக்காதே. போன்ற கோஷங்கள் அடங்கிய பதாதைகளும் மாணவர்களினால் ஏந்திச் செல்லப்பட்டது.

## சிவகுமார்!

உன் பெயரை உச்சரிக்க
ஒருமுறை
உதடுகளைத்
திறக்கின்றேன்
என்ன அற்புதம்
பேசத் தொடங்கியது
என்பேனா
உரும்பிராய் பெற்றெடுத்த
தேவகுமாரனே!
தாயகத்தை காதல் செய்ய
கற்றுக்கொடுத்தவனே!
மரணத்தை வென்ற
மாவீரனே!

தமிழீழத் தியாகத்தின்
முதலெழுத்து நீ
உனது அர்ப்பண
விடியலுக்குப்
பின்புதான்
போராட்ட உணர்வு
புலரத் தொடங்கியது
விடுதலை என்ற
வெங்கனலை
இனங்காட்டிய
தீச்சுடரே!

உனது ஒளி பட்ட பின்பு
ஓராயிரம் சுடர்கள்
இங்கு உதயமாயின
அஞ்சி அஞ்சி சாகும்
அயல் வீட்டு
அடக்குமுறையாளர்கள்
உனது அஞ்சாத
வீரம் கண்டு
அதிசயித்து நின்றார்கள்.
மானம் காத்த மறவனே!

உனது இலட்சியம்
தமிழீழத் தேசியக்
கொடியாக
நாளை பறக்கும்
அதன் ஒவ்வொரு
அசைவிலும்
உன் பெயர் தவழும்.

**இலக்கியா**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**ஆதிலட்சுமி சிவகுமார்**




பிரதான வீதியில் ஏதோ ஒரு வாகனம் விரைந்து போவது துல்லியமாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து வேறும் ஏதாவது வாகனங்கள் இரைகிறதா? என செவிகளை கூர்மையாக்கி அவதானித்தாள் பாக்கியம். எதுவித அசுமாத்தமும் இன்றி வீதி அமைதியாய் இருந்தது. ஏனோ இன்று தூக்கம் வராமல் மனது சுமையாய் இருந்தது.

'குளத்தடி வளவுப் பக்கமா மயூரனும், இன்னுமொரு பொடியனும் சயிக்கிள்ளை போறாங்கள்...'

காலையில் அம்மன் கோயிலுக்கு மாலை கட்டும் மணியம் பூப்பிடுங்க வந்தபோது சொன்னதுதான் நினைவில் உழன்றது.

மயூரன் அங்கால நிற்பதாகத்தான் யாரோ சொன்னார்கள். ஆனால் மணியம் அவனைத் தன் கண்களால் கண்டதாகச் சொன்ன பிறகு மனது குழம்பி அலைந்தது.

கொஞ்ச நேரத்துக்கு முதல் கேட்ட வாகனச் சத்தத்தின் பிறகு எதுவித ஓசையுமில்லை.

'இந்த ஊரில் மனித வாடையே இல்லையோ என்னுமளவுக்கு ஊர் அடங்கிப்போயிருந்தது.

ஜன்னல் கண்ணாடிகளுக்கு அப்பால் வெளியே நிலவு காலித்துக் கொண்டிருந்தது. நிலவு வெளிச்சத்தைப் பார்த்துக் கிளர்ச்சி கொண்டு ஊளையிடும் நாய்கள் கூட வாய்திறக்கவில்லை.

'வர்ற அமாவாசைக்கு அடுத்த நாள் தேப்பன்ர துவசம்... ஆரிட்டையும் சொல்லி எண்டாலும் விடவேணும்...' நினைவு சுரந்தது.

வழமையாக தகப்பனின் துவச நாளன்று நண்பர்களையும் கூட்டிவந்து மயூரன் உண்டுவிட்டுத்தான் போனவன் என்பதை நினைத்துப் பார்த்து மனம் நொந்தாள்.

கணவன் உயிரோடு இருந்த போதெல்லாம்...

'அவனை அவன்ர வழியிலை விட்டுவிடு பாக்கியம்' என்று தான் சொல்லுவார். அவர் சொல்வதைத் தான் செயற்படுத்திவிட்டதாக இப்போது மனம் பூரித்தது அவளுக்கு.

வேலி ஓரமாக யாரோ நடந்து போவது போன்று காலடிச் சத்தங்கள் கேட்டன. பொருட்படுத்தாமல் கிடந்தாள்.

நேற்று முன்தினம் அதிகாலை –

ஜீப் ஒன்றில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி பெற்றோர்கள் எல்லோரையும் ஊர்ப் பாடசாலையில் ஒன்பது மணிக்கு கூடுமாறு அறிவித்தபடி சென்றது.

பாக்கியமும் போயிருந்தாள்.

எல்லோருக்கும் ரீயும் பிஸ்கட்டும் தரப்பட்டது. சீருடைகள் சிரித்துச் சிரித்து உபசரித்தது ஆச்சரியமாயிருந்தது அவளுக்கு.

நூறு நூற்றைம்பது வரையான, வயதான இளமையான பெற்றோர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

தடதடவென நிலத்தை மிதித்தபடி அதிகாரி வந்தான். எல்லோரையும் பார்த்து கை கூப்பிவிட்டு அமர்ந்தான்.

அவனருகே இன்னுமொரு உத்தியோகத்தர் சாதாரண உடையுடன் இருந்தார்.

அதிகாரி அமர்ந்தபடியே பேசத் தொடங்கினான். ஒருவருக்கும் அவன் என்ன சொல்கிறான் என்று புரியவேயில்லை.

அதிகாரி பேச்சை நடுவிலே நிறுத்த.....

அருகே இருந்த உத்தியோகத்தர் அவன் சொன்னதை தமிழில் சொல்ல ஆரம்பித்தார்...

'நாங்கள் உங்களுக்கு நல்லதுதான் செய்வோம். உங்களுக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தர நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் ஆரும் புலிகளை ஆதரிக்கக் கூடாது. அவர்களை கண்டால் எங்களுக்கு இனங்காட்ட வேண்டும். இல்லையென்றால் என்ன நடக்கும் என்பது நான் சொல்ல வேண்டியதில்லை....'



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருமணி நேரமாக அந்த அதிகாரி பேசியதன் சாராம்சம் இதுவாகத் தான் இருந்தது.

கூட்டம் முடிந்து எல்லோரையும் போலத்தான் பாக்கியமும் வந்தாள்.

'அவன் சொன்னதைக் கேட்டியே.... எங்களுக்கேன் வீண்சோலிய... பெடியள கண்டால் கதை பேச்சு வைக்காமல் போயிட்டா சரி...'

ஊர் பெரியவர் ஒருவர் சொல்லிக் கொண்டு வந்தார்.

'பாவம் எண்டு நாங்கள் நினைச்சு பெடியளுக்கு உதவினாலும் அவனுகள் மணந்து பிடிச்சுடுவான்கள்.... பிறகு ஆர் தப்பிறது....?

பழைய நினைப்பிலிருந்தவளுக்கு பின் கதவு மெதுவாக தட்டப்படும் சத்தம் கேட்டது.

திடுக்கிட்டு காதுகளைக் கூர்மைப் படுத்தினாள்.

'அம்மா.....'

மீண்டும் காதுகளைக் கூர்மைப் படுத்தினாள்'

'அம்...மா...'

பின் கதவடியில் தான் குரல் கேட்டது மெதுவாக, கண்களை முழித்துப் பார்த்தாள்.

சுவர் மூலைக்குள் அரிக்கன் லாம்பு மினுங்கிக் கொண்டிருந்தது.

'அம்.. மா...'

கைகளை ஊன்றி எழுந்து பின்பக்கம் போனாள்.

'ஆரது?'

'கதவை ஒருக்கால் திறவுங்கோ.... சொல்லுறம்...'

மனதுக்குள் அச்ச உணர்வு சுரந்தது. கை கால்களில் மெதுவான நடுக்கம் பரவ ஆரம்பித்தது.

வெளியே நின்றவர்கள் புரிந்து கொண்டார்கள் போலும்.

'பயப்பிடாதையுங்கோ அம்மா.... கதவைத் திறவுங்கோ.... உங்கட பிள்ளையள் தான் வந்திருக்கிறம்...'

நெஞ்சுக்குள் குளிர்ச்சி பரவ..... மெல்ல கதவை நீக்கினாள்,

'ஆர் ம..யூரனே...'

'இல்லையம்மா.... நாங்கள் செட்டியும் குமணனும்...'

'என்ன தம்பியவை....?

'குமணனுக்கு சரியான காய்ச்சல்... பனடோலும்... குடிக்கிற தண்ணியும் தாருங்கோ'

இருளில் தட்டித் தடவி... உள்ளே போய்ப் பணடோலும் தண்ணியும் எடுத்து வந்தாள்.

மடக்மடக்கென்று செம்புத் தண்ணி முழுவதையும் ஒருவனே குடித்து முடித்தான்.



'நாங்கள்.... நிண்ட இடம் காலமை துவக்கம்' றவுண்டப்'... ஒருமாதிரிச் சுழிச்சுப் போட்டு வந்திட்டம்...'

'என்னம்மா?.... பயமாக் கிடக்கே .... ஒருமாதிரியாய்ப் பேசாம நிக்கிறியள்...'

'ச்சா....' என்றாள். ஆனால் உள் மனம் இலேசாக நடுங்கியது. பிள்ளைகளைத் திரும்பிப் பார்த்தாள். இருவரும் ஆழ்ந்த நித்திரையில் கிடந்தார்கள்.

அந்த அதிகாரியின் அகோரத் தோற்றம் ஒருமுறை நெஞ்சில் வந்து நிழலுருவாடியது.

'காலமை துவக்கம் ஒண்டும் சாப்பிடவுமில்லையம்மா...'

நெஞ்சில் ஆழத்தில் எதுவோ குத்தியது போன்ற வலியை அவள் உணர்ந்தாள்.

'உள்ளுக்கு வாங்கோ.... புட்டு இருக்கு.... சாப்பிடலாம்...' கதவை அகலத் திறந்தாள்.

குளிர்ந்த காற்று சில்லென்று அவள் முகத்தில் தொற்றியது.

அந்த இருவரும் உள்ளே வந்தார்கள்.

இருளில் துரிதமாக அவளது கைகள் இயங்கின.

எதிரியின் கட்டுப்பாட்டிலிருக்கும் பெண் என்பதை விட.... தான் ஒரு அன்பான.... உணர்வு மிக்க தாய் என்கின்ற பெருமிதத்தை அவள் முகம் பிரதிபலிப்பது போலிருந்தது.

**முற்றும்.**

## வரவேற்பு!

பாலுக்குப் பூனைகள்
காவலாய்...
ஓணான்கள்
சாட்சியாய்...
தெருவழி நெடுகிலும்
காப்பரண்கள்
எம்மைக்
காப்பதாய்...
நிலைமைகள்
வழமைக்குத்
திரும்புவதாய்...
பறவாயில்லை
நீங்களும்
வரலாம்....

ஜெக. சரவணன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதை

# நிலவில் தீ

- சுபா -

'விடிவெள்ளி
பூக்கவில்லை'
'வீதியிருள்
தொலையவில்லை'

விழிநீர் கோர்த்து
விம்முகிறது நெஞ்சம்

திசைகள் இன்னும்
வெளிக்கவில்லை
தீய இருள் இன்னும்
கலையவில்லை
சிந்தும் கண்ணீரும்
ஆறவில்லை
தேசம் பிரிந்த துயர் தீயாய்
சுடுகிறது.

கூடுடைத்துக் கலைந்த
துயரால் நொடிந்தோம்
கோடி எழில் தாயகத்தைப்
பிரிந்தோம்
பாலாய் பொழி நிலவைப்
பகைவர் பறிக்க
குனிந்தோம்
பாடிடும் ஒற்றைக்
குயிலின் சோகம்
கொண்டோம்

வெள்ளிகள் பூக்கும்
வானத்தை இழந்தோம்
வெள்ளலை பூக்கும்
கடலினைப் பிரிந்தோம்

துள்ளி வரும் அலைகளின்
துடிப்பைத்
தொலைத்தோம்
தூயவராம் புலி வீரர்
துணையை மறந்தோம்

விடுதலைப் பாட்டோடு
வரும்
காற்று
விடியலின் பாட்டுக்கு
தாளமிட விரல்கள்
அசைப்பாய்— உன்
விழிகள் சிவந்திடும்
நாளில்



திசைகள் வெளித்திடும்—
நீ சிரிப்பாய்

இணைகள் பிரிந்த
குயில்களின் தோப்பென —
எம்
இதயப் புலம்
அழுகின்றது.
வீட்டை விளைநிலத்தை
காட்டைக் கரம்பையை
விட்டேகக் கலைத்த
கொடும் துயரில்
கண்ணீர் உகுத்து
நிற்கின்றோம்.

எதை எதையோ
தொலைத்தவர்களைப்
போல
பதை பதைத்துக்
கொண்டு
எங்கள் ஊரின் மனிதர்கள்
போகிறார்கள்

ஒடுங்கிய சாலைகளூடும்
இடுக்கு நிறைந்த
வழிகளூடும்
இருள் கவிந்த
தெருக்களூடும்
இழப்பின் துயர்
பின்னே திரியப்
போகிறார்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலை எழும் கதிரவனின்
மகிழ்வு பொங்குகிற
முகங்களில்
சோகமும், துயரமும்
அப்பியது யார்?

திசைகள் காணச்
செலுத்துகின்ற
தீரா முயற்சியில்
தோற்றார் போலும்
முடங்கிய வாழ்வு

கும்மிருட்டில்
குரங்குகள் கூடு பிய்க்க
கலைய நேர்ந்த குருவிகள்
போலும் அலறலை
உள்ளொலிக்கும் துயரை
யாரறிவார்.

உயிர் உருகும் சத்தம்
யார்க்கு இங்கே கேட்கும்?

திசையெலாம் கலைந்த
புதிய கூடுகளுள்
தஞ்சமடைந்த வாழ்வின்
கொடு துயரின் வலியை
யாரறிவார்?

திசையெலாம் சிதறி
சிந்தும் கண்ணீர்த்
துளிகளில்
— எங்கள்
இனிய செல்வங்களும்
குளித்தன
வேரூன்றி தளிர்க்கும்
தளிர் போலும்
புன்னகையும் போச்சே

சிறக்கை அசைவில்
மெல்லிய சிலிர்ப்பும்
அடங்கிப் போச்சே



புயலிடை நிமிர்ந்த
பனந்தோப்பின்
இணை பிரிந்த
குயில்களென
கொண்டதொரு
சோகமாச்சே

தலைவிரி கோலமாய்
நின்றிரஞ்சும்
அகதி வாழ்வெமக்கு
எங்கனம் வாய்த்தது?

எங்கள் வாழ்வும் வனப்பும்
சந்தைக் கூட்டச்
சங்கதிகளோ?

பேசினோம்: சிரித்தோம்
ஆடினோம்: மகிழ்ந்தோம்
அழுதோம்:
கூடினோம்: கலைந்தோம்
தோம், தோம், தோம்
தோம், தோம்

கூத்தின் ஜதிகள் முழங்க
வேஷங்கள் பூண்டோம்
வாழ்வே ஒரு நாடக
மேடையில்
நாளும் தோன்றுமோ!

கூடிக் கழித்திருந்து
கொலுவிருந்த
வாழ்வெமது
விடுதலைப் பாடல்கள்
பாடி
விண்ணதிர
விண்ணதிர சிறகசைத்துப்
பூமியில்
புதிதாய் உயிர்க்கும் நாள்
எந்நாளோ?

எங்களூர் வாழ்வும்
வனப்பும்
சந்தைக் கூட்டச்
சங்கதிகளோ?
எங்களூர் வளம் நிறை
பனந் தோப்பு
இரப்பவனைப் போல்
இரஞ்சி நிற்பதுவோ?

வாழ்விடமேதுமின்றி
அன்பு
வறிதே
கிடக்கின்ற
பூமிகளுள் உழன்றோம்
போக்கிடமறியா
பொறிகளில்
சிக்கி
போகும் உயிரை நாளுமே
மாய்த்தோம்
தோம், தோம், தோம்
தோம், தோம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அவர்கள் வருவார்கள்

முல்லைக்கோணேஸ்

*மடியும் ஒவ்வொரு நிமிடங்களிலும் பாதாளத்தின் நடுவே மெல்லிய கயிற்றில் தொங்குவதானதொரு உணர்வையே தருகிறது. வாழ்வின் இழையங்கள் அறுந்து போனதாகவும் எதிலுமே பிடிப்பில்லாததான விசனமுற்ற நாட்களாகவுமே கழிகின்ற பொழுதுகள் தான் தொடருகிறது. யாருடனும் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியாகப் பேசவே இயலாத இந்தப் பொழுதுகளில் இப்போதே மரித்துவிட வேணுமென்பதாய் மனசு அலைகிறது. நிம்மதியைத் தொலைத்து நீளும் இரவுகளில் சிலுவை சுமக்கும் கல்வாரிப் பயணமெனத் தைக்கிறது படுக்கை.*



இப்படித் தூக்கத்துக்காய் கிடந்து தவிக்கும் போதெல்லாம் தொலைந்துபோன அந்த இனிமையான பொழுதுகள் தான் நினைவுக் குமிழ்களாய் நெஞ்சில் கசிகிறது.

ஏ.எல் பரீட்சை எழுதிவிட்டு றிசல்ற்றுக்காகக் காத்திருந்த அந்த நாட்களில் சைக்கிள்களில் கூடிக் கூடித் திரிந்து களைத்துப் போன போது கடலையும் பனங்கிழங்கும் வாங்கிக் கொண்டு வந்து நீண்டு நிமிர்ந்த அந்தப் பனைகளின் நடுவே வளைந்திருந்து சாப்பிடும் அலாதி சுகம் எப்போது எங்களை விட்டுப் போனது என்பதை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன். கனத்துப் போகும் நெஞ்சில் இரத்தங் கசிவதாய் எங்கோ தளாத வலிதான் ஏற்படுகின்றது.

கிராமக் கோட்டுச் சந்திக்குப் போகும் மெயின் ரோட்டில் இருந்து இரு நூறுயார் தள்ளிக் கிடக்கும் வெட்டை வெளியில் வெயில் வெயிலாய்க் கிறிக்கற் ஆடியபடி சிறுவர்கள் குதூகலிப்பர். பனைகளின் கீழே விரிந்து போய்க் கிடக்கும் நிழலில் நாங்கள் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக் கொண்டே நீண்ட நேரமாக உட்கார்ந்திருப்போம். மாலை வரும் வரை யாருமே அந்த இடத்தை விட்டு நகரவே முடியாதளவுக்குச் சுவாரஸ்யமான விடயங்களெல்லாம் சம்பாசனைகளில் வந்து போகும்.

சீலன் தன் சினேகிதி பற்றி எந்த நேரமும் கதைத்துக் கொண்டேயிருப்பான். அவள் மீது தான் உயிரையே வைத்திருப்பதாகவும், அவளையே கல்யாணம் செய்து கொள்வதாகவும் கூறிக் கொண்டிருந்தான். பீற்றரின் கனவெல்லாம் விழுந்துபோய்க் கிடக்கும் தனது குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதாகவே இருந்தது. என்னென்ன தொழில் செய்தால் முன்னேறலாம் என்பதை ஆலோசித்தபடியே இருப்பான். றிசல்ற்றைப் பார்த்துவிட்டு ஏதாவது சொந்தமாய் தொழில் தொடங்கப் போவதாக அவனுக்கு எண்ணம் இருந்தது. சுரேசிற்கு எந்தவிதமான ஐடியாக்களோ இல்லாமல் எதற்கெடுத்தாலும் சிரித்தபடியே இருப்பான். அப்பாவி.



ஆனால் பின்னாளில் கூட்டைப் பிய்த்தெறிந்து குருவிகள் கலைந்து பிரிந்து போனது மாதிரி எவ்வாறெல்லாம் ஒருவரை ஒருவர் அறியாதபடிக்கு கண்காணாத தூரங்களிலெல்லாம் தொலைந்து போனார்கள்.

இப்போதும் அந்த வெளியில் அடித்த பந்தை எடுக்கச் சிறுவர்கள் ஓடுவதாகவும், கிராமக் கோட்டுச் சந்திக்குப் போகும் தெருவில் சந்தையால் போகும் கதிரேசு மாமா கள்ளுக் குடித்த உற்சாகத்தில் காத்தவராயன் பாட்டுப் பாடிக் கொண்டு போவது போலவும்: கீக்கிறீக்...... கீக்கிறீக் என்று அவரது சைக்கிள் சத்தம் காதில் ஒலிப்பதாகவுமே படுகிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும் மீண்டும் அந்தப் பனைகளும் அவற்றுக்கப்பால் விரியும் வெளியும்தான் ஞாபகத்தில் படர்கிறது.

இப்போது அந்தக் கிறிக்கற் சிறுவர்கள் எங்கெல்லாம் சிதறிப்போனார்களோ? அதில் எத்தனை பேர் காணாமல் போனோர் பட்டியலில் இடம் பிடித்தார்களோ?

எங்கள் ஊருக்கு இராணுவம் வந்த போது முதன்முதலில் அந்தப் பனைகளின் நடுவேதானாம் சென்றி போட்டு உட்கார்ந்தது. பின் ஒவ்வொரு பனைகளாய்த் தறித்து பெரிய பண்டும் பங்கரும் அமைத்து நிரந்தரமாய்த் தன் இருப்பைப் பலப்படுத்தியபோது அந்த இராணுவ மினி முகாமைச் சுற்றியிருந்த ஏராளமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

இதைக் கேள்வியுற்றதும் தான் சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடு இப்படிப் போனதே என்று அப்பா அதிர்ந்து போனார். அவரைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் ஏகப்பட்ட பிரயத்தனங்கள் செய்யவேண்டியிருந்தது.

வெளியில் உயிரை உறைய வைக்கும் பீதியைத் தருவதாய் இருள் கவிழ்ந்து கிடக்கிறது. எங்கும் நிசப்தமே நிலவுகிறது. இந்த நாய்கள் கூட இப்போது குலைப்பதை நிறுத்தி விட்டனவோ என்றே நினைக்கத் தோன்றுகிறது! சரி இந்த முற்றத்து வேப்பமர வெளவால்கள் எங்கே போய் ஒளிந்தன? முந்தியென்டால் வேப்பம்பழக் காலத்துக்கு எங்கிருந்துதான் அப்படி வருகின்றனவோ; கொள்ளை கொள்ளையாய் வந்து மரத்தில் மொய்த்துக் கிடந்து கத்தலும் சடசடப்புமாகவே இரவிரவாகத் தொல்லைகள் கொடுப்பன.

இப்போது எங்கேயும் அவற்றின் அசுகைகூடத் தெரியவில்லை. அதுகள் கூட எங்காவது தொலை தூரங்களுக்கு புலம்பெயர்ந்துவிட்டனவா? அல்லது யாருக்கும் ஓசை படாமல் வந்து தங்களின் கருமங்களை முடித்துக் கொண்டு போய்விடுகின்றனவா?

எதுவுமே நிலையற்றதாகிப் போன துயர்தரும் வாழ்வு நாளைய இருத்தல் என்பது நிச்சயமில்லாத போது எதிலுமே லயிப்பற்ற ஜடமாகத்தானே நடமாட முடிகிறது.

முன்னரென்றால் எங்கள் ஊர் ஆழ்வார் கோயில் ஆவணி மாதத்தில் வரும் கடைசி மூன்று தினங்களும் விடிய விடியத் திருவிழாவில் மூழ்கிக் கிடக்கும். சுற்றுப்புறமெல்லாம் ஒளி வெள்ளத்தில் பளிச்சிடப் பட்டுச் சாறிகள் மினுங்கும். நாலு முழ வேட்டிகளோடு நாலைந்து பேராய் அந்த ஜன நெரிசலில் உலா வருவதே சுவர்க்க சுகம். அவ்வாறான ஒரு வருடத் திருவிழாவில்தான் மனேச்சற்ற மகள், வசந்தனோடு ஓடிப்போனாள். கனகம் மாமியின் மகளை வரணியில் இருந்து வந்த மாப்பிள்ளை பகுதி இந்தத் திருவிழாவில் தானாம் பெண் பார்த்தார்கள். இன்னும் என்னென்னவோ சங்கதிகள் எல்லாம் அங்கு நடந்து முடியும்.



மூன்றாம் நாள் பொங்கல் வைத்து திருவிழா நிறைவெய்தும் போது மூன்று நாளும் இளசுகள் தாம் பரிமாறிக்கொண்ட பார்வைகளையும், பறிகொடுத்த மனசுகளை மீளப் பெறமுடியாத துயரங்களையும் மீட்டியவாறு வீடு நோக்கிப் போய்க் கொண்டிருப்பர்.

மூன்றுநாளும் மாமிசம் உண்ணாது விரதமிருந்து பூசை முடித்த கனபேர் வெறும் மேலுடன் நேரே கள்ளுக் கடை நோக்கி திருவிழாவில் நடந்த குற்றம் குறைகளைப் பற்றிக் கதைத்தவாறு நடப்பர். வீடு திரும்பும்போது மீனோ இறைச்சிப் பாசலோ கையில் இருக்கும். இன்னும் சிலர் வெறிச்சோடிப்போன வெளி மண்டபத்தில் இருந்து கூடிக் கதையளப்பர். சில வேளைகளில் அதில் ஐயரின் தலையும் தெரியும்.

இவையெல்லாம் எம்மை விட்டுப் போய் நெடுநாளாயிற்று.

எங்கு போனாலும் ஐந்து மணிக்குள் வீடு திரும்பும் அவசரம். ஒப்பாரி கேட்டால் உறவுக்காரரெண்டாலும் விடிந்த பின்பே துக்கம் விசாரிக்கும் துர்ப்பாக்கியம்.

இந்த முன்னிரவில் நிம்மதியற்ற தூக்கம் வர மறுக்கும். இந்த நிமிடங்களில் யாருமே அறியமுடியாதபடிக்கு என் ஜீவன் கதறுகிறது. ஊ.... ஊ....





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றிரையும் காற்று பனையோலைகளில் பட்டு சரசரக்கிறது. இப்படி வீசும் இந்தக் காற்று மனித வெறியர்கள் குறி வைத்துக் காத்திருக்கும் அந்த முகாமினுள்ளும் உக்கிரமாய்ப் பெரும் புயலென அவர்களை அள்ளுண்டு, அடிபட்டு திணறடிக்கப் பண்ணுவதாய் வீசவேண்டுமென மனம் அவாவுகிறது.

இந்த இரவின் அந்தகார இருளில் அந்த முகாமினுள்ளே புகை பிடித்த வாறே.... குரூரம் கொப்பளிக்கும் தொனியில் ஏதாவது கதைத்தும் சிரித்தும் கொண்டோ அவர்கள் இருப்பார்கள்.

சென்றியில் நிற்பவனின் துப்பாக்கி அப் பிராணியொருவனைத் தீர்த்துக் கட்டிய பெருமிதத்தில் ஓய்ந்துறங்கும் அல்லது யாரையாவது குறிவைத்த படி வெடித்துச் சிதற இருக்கும் அந்தக் கொடூர கணநேரத்துக்காகக் காத்துக் கிடக்கும்.

இன்னும் உள்ளே கிருஷாந்தியைப் போலோ ராஜினியைப் போலோ யாராவது அவர்களின் காம இச்சைக்குக் கதறிக் கதறி தங்களை இழந்துகொண்டிருக்கலாம்.

இரண்டு நாட்களுக்கு முன்பும் கூட முகாமினுள்ளே யாரோ ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டதாய் ஊருக்குள் பேசிக்கொண்டார்கள். அந்த முகாமிற்கு அவர்கள் வந்த புதிதில் ஊரில் உள்ள சனங்களோடு மிகவும் பண்பாகவே நடந்துகொண்டதாகப் புளுகித் திரிந்தவர்களில் அநேகம் பேரினது உறவினர்கள் அவர்களைத் தேடி ஒரு நாளைக்குப் பல தடவை முகாமை நோக்கி அலைந்து திரிவதுதான் மிகவும் மனவேதனையைத் தருகிறது. சனங்கள் அவர்கள் மேல் எவ்வளவு நம்பிக்கைகொண்டு நடந்தார்கள்.

உயிர் கரையும் இந்த அர்த்தராத்திரியிலும் சென்றியில் இருந்தவாறு அந்தக் கொடிய விழிகள் யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனவோ; அவர்கள் இந்த இருளை ஊடறுத்துக் கிழித்தவாறோ, இந்த இருளோடு இருளாய்க் கலந்தவாறோ வருவார்கள்.

அவர்கள் வருவார்கள் என்கிற நினைவே நெஞ்சில் நிறைவைத் தருகிறது.

முற்றும்.

# மாவீரனே வணக்கம்!

**வி**டிந்தால்
விழிப்பதுந்தன்
வீர முகத்தில் தான் - அண்ணனே!
வீரம் மிளிர்கிறது உந்தன்
விழிகளில் தான் - கண்ணனே!
ஆம்
என் படுக்கை அறையில்
மிடுக்காய் இருப்ப துந்தன்
நிழற்படந்தான்!...



மாவீரனே!
நீ இமை திறந்தால் சூரியோதயம்!
அவை வெறும் விழிகளல்ல
வெற்றிச் சூரியன் எழும் கடல்!
கதிர்பட்டு காடையன்
விழும் திடல்.



என் ஈர விழிகளால்
உன்னைக் காண்கிறேன் - உன்
கண்ணில் ஈழம் தெரிகிறது....!
ஆம்!
என்னில் தமிழீழம் தெரிகிறது...!
உன் வெற்றிகள், என்காதில்
வேழம் சொரிகிறது - ஆம்
உன் வீரத்தின்
ஆழம் தெரிகிறது!



தேயிலைக் கொழுந்துகள்
கொய்தனர் தமிழர்
தமிழர் தலையை
கொய்தனர் சிங்களர் - கொதித்து
நீ புறப்பட்டாய் - இல்லை!
புறநானூறு புதிப்பிக்கப்பட்டது.....



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேற்றுவரை யானை வந்து
முதுகு சொறியவும்... குரங்குகள்
கொப்புகளில் தாவிக் குதிக்கவும்
மட்டுமே ஓங்கி நின்ற இந்த
மரங்களின் அடியில்தான் இன்றைய
ஈழத்தின் வாழ்வு நகர்கிறது....
உணவு சமைக்கவும்
உறங்கி எழும்பவும் எல்லாமுமே
மரத்தடி என்றாகிப்போன
இவ் வாழ்வு என்றுதான் தீருமோ?



பானையிலே அரிசி போட்டு பலநாளாய் ஆகிப்போச்சு
கண்ணெல்லாம் பஞ்சாகி...
நேற்றுப் பெய்த மழையில் விறகும் ஈரமாகிப் போச்சு.
வயிறெரிந்து பசிக்கும் குழந்தைகளின் பசிபோக்க
நெருப்பே கொஞ்சம் ஓங்கி எரி!
உலையை கொதிக்க வை!

கவிவரிகள் - ச.ச.முத்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராணுவத் தோழருக்கு

கணபதி கணேசன்



நீயும் நானும் ஒன்றுதான்
துப்பாக்கியைச் சுமந்தவர்கள்
என்ற வகையில்!
எமது மக்களின் மீட்சிக்காக
நான் ஏந்திய துப்பாக்கிக்கும்
ஏகாதிபத்தியத்தின் ஏவல்
நாயால்
தூண்டப்பட்டு நீ
தூக்கியிருக்கும்
துப்பாக்கிக்கும் உள்ள
முரண்பாட்டை நீ
என்றேனும்
சிந்தித்தது உண்டா?

உனது சகோதரி என்றாவது
அரச படையினரால்
கற்பழிக்கப்பட்டதுண்டா?
உனது இல்லம்
சூறையாடப்பட்டுக்
கொளுத்தப்பட்டதாக
அறிந்திருக்கிறாயா?
யுத்த பயத்திலும்
இனவெறியிலும் மட்டுமே
கணித்திருப்பதையும் கண்டு நீ
களிப்படைகிறாயா?

நீங்கள் சிந்திக்கக்கூடாது
என்பதற்காகவே
எம்மினம் உங்களால்
சூறையாடப்படுவதை
அனுமதிக்கிறார்கள்!

உரிமை கேட்டு நீ
போராடக்கூடாது
என்பதற்காகவே எமது
உரிமைகள்
பறிக்கப்பட்டதைப் பற்றி நீ
சிந்தித்ததுண்டா?

உனது சுயத்தைப்
பாசிசத்துக்கு அடகு வைத்து
கூலிக்குக் குருதி குடிக்க
ஆரம்பித்த
உனது செயல்
இயல்பானதுதானா?

இதே துப்பாக்கிகளும்
பீரங்கிகளும்
உனது இனத்திற்கு
எதிராகத் திரும்பும் வரை
காத்திருக்கப் போகிறாயா?

எம்மைப் புரிந்து கொள்
நீ முயலும் வேளையில்
உனக்குப் பின்னால்
அரசு நீட்டிக்
கொண்டிருக்கும்
நாசிசக் கரங்களை இனம்
காணும்
திறத்தை வளர்த்துக் கொள்!

இது உனது இனத்தின்
விடுதலைக்கு வித்திடும்!

★★★

# எதிரியின்



குவிந்து கிடக்கும்
மண்டையோடுகளும்
குருதி சிந்தும் மனித
எலும்புகளுமாய்
மனித நாகரீகம்
மாண்டுபோன
மட்டக்களப்புத்
தெருக்களில்....

இராணுவ லொறிகளும்
யந்திரத் துப்பாக்கிகளும்,
ரோந்து சுற்றிக்
கொண்டிருக்கும்
யாழ் வீதிகளில்...

ஏ.... தமிழ்க் குழந்தையே
என்ன தேடிக்
கொண்டிருக்கின்றாய்?
உனது சகோதரனை
இராணுவம்
பிடித்துக்கொண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்தத்தில் கைநனை!

தருமரத்தினகுமார்

போயிற்று!
வேலைக்குப் போன உனது
சகோதரி
அமெரிக்கத் துப்பாக்கியால்
சுடப்பட்டு
இஸ்ரேல் பெட்ரோல் ஊற்றி
எரிக்கப்பட்டாள்.

உன் அப்பாவின் கண்
எதிரேயே
உன் பிரியத்துக்குரிய அம்மா
கற்பழிக்கப்பட்டாள்.
உனது அப்பாவும்
கொலை செய்யப்பட்டார்.
உனது நகரம் எரிக்கப்பட்டது!
உனது வீடு
சூறையாடப்பட்டது!

இன்னும்
இங்கே என்ன மிச்சமிருக்கிறது
என்றா அழுகிறாய்? அழாதே.
நீ அனாதையில்லை!

நீ ஏந்துவதற்குச் சில
ஆயுதங்களையும்
நீ போராடுவதற்கு ஒரு
பூமியையும்
அவர்கள் விட்டுச்
சென்றிருக்கிறார்கள்
உன் எதிரியின் இரத்தத்தில்
கைநனைத்து
நீ ஒரு போராளி என்று
நிரூபி...

★★★

# புத்தரின் படுகொலை

எம்.ஏ.நுஃமான்

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை;
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக்கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால் –
ஆகையினால் தான்...."
என்றனர் அவர்கள்.

"சரிசரி,
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.

தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது.
தம்ம பதமும்தான் – சாம்பரானது!

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

